உ

கடவுள் துணை.

யாகோபு திருவாய் மலர்ந்தருளிய

சுண்ணம் நா-க்கு

# சூஸ்திரச்சுருக்கம் 155.

ஷை சுருக்கம்-ருய

இஃது

மதுரை யானைக்கல் தெரு, வித்துவான்

மு. குழந்தைவேலுப் பிள்ளை அவர்கள்

ஏட்டுப்பிரதியின்படி

மதுரை வித்வான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதித்தபடி,

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்,

இ. ராம.

குருசாமிக்கோனார் சன்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி, குருசாமிக்கோனார் தெரு,

ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸில்,

பதிப்பிக்கப் பெற்றது.

யாகோபு திருவாய் மலர்ந்தருளிய

சுண்ணம் நா—க்கு

# சூஸ்திரச்சுருக்கம் 155.

முத்தனிற சூல்பாதந் துதியேசெய்து
மூந்நூறு சுண்ணமென்ற காண்டந்தன்னை
வித்தகமாய்ச் சுருக்கியே சுருக்கமாக
வினையமாய் நூற்றன்பத் தஞ்சதாக
சித்தம்வரச் சுண்ணமுடன் செந்தூரங்கள்
செயமாகக் கருவோடு செய்கைபாகம்
சத்தியமாய்ச் சொல்லிவிட்டே னிந்தநூலை
தனையோத வாதவருந் தகைமையாமே. (1)

தகைமைபெற்ற யிந்தநூற் றன்பத்தஞ்சில்
தாட்டிகமாய் முன்சொன்ன சுண்ணம்வைத்து
உகமையாய்ச் சரக்குகளைக் கட்டி நீயும்
உறுதிபெறக் களங்குசெந் தூரம்பண்ணு
பகமையில்லா வாதம்வரும் புடமிறங்கும்
பருதியுள்ள மட்டுசெகும் வாழலாகும்
செகமெய்க்கும் உண்டுடுக்க லாகுங்கண்டாய்
சீர்பெறவே யாகோபு சொன்னார்தானே (2)

சொன்னதொரு முன்னூரில் துத்தந்தன்னை
சுகம்பெறவே சொல்லிவிட்டேன் திறமை
தன்னயமா யிந்தநூற் றன்பத்தஞ்சில் (தன்னை
நா... யே துத்தத்தைச் சுண்ணம்பண்ணி
கன்னலென்ற தாளகத்தைக் கட்டி நீயும்
கருத்துறவே வங்கத்திற் சேர்த்துக்கட்ட
முன்னியே ரவிபழுக்கும் வேதையாகும்
முக்கியமா யாகோபு மொழிந்தவாரே (3)

மொழிகேட்டு நபிமார்கள் யாகோப்பென்று
முக்கியமாய்க் கைகொடுத்து முத்தமிட்டு
வழியாகச் சொன்னதொரு யிந்த நூலை
வண்மையாய்க் கிழிக்கவே சொன்னபோது
பழியாகச் சொன்னார்க ளென்றுசொல்லி
பத்தியே தானொழித்து வைத்துத்தானும்
விழிபோல உலகத்து வாதிக்குத்தான்
வீம்பாகக் குடுத்துவிட்ட விதமுமாமே (4)

விதமாக யேழையாம் வாதிமார்கள்
விரும்பியே யிந்தநூல் தன்னைப்பார்த்து
அதமாகச் செய்திட்டுப் பிழைக்கவென்று
அடைவாக அல்லாவுக் கொப்பாய்ச் சொன் (னேன்
நிதமாகக் கைபாக வரிசைகண்டால்
நீனிலத்திற் பெரியநபி யாகுவீர்கள்
அதமாக யெப்பொருளும் பார்த்துத்தேற
ஆதியாங் குருவாமென் றறையலாமே (5)

துருசுச்சுண்ணம்.

அறையுறேன் துரிசினுட சுண்ணந்தன்னை
ஆண்மையாய் அல்லாவுக் கொப்பாயப்பா
பறையாதே உலகத்தில் முறட்டுவாதி
பாகத்தைச் சொல்லாதே பலனுமில்லை
சிறைபோலக் காத்திருந்த வாதிக்குத்தான்
சீராகச் சொல்லிவிடத் திறமுமாகும்
முறைபோலச் செய்திடுவான் முடிப்பானப்பா
முத்தியா யாகோபு விளக்கமாமே (6)

விளக்கமா யாகோபு சொன்னநீதி
விதமாக ரசவாதஞ் செய்யவென்றால்
பழக்கமா யிந்தநூல் தன்னைப்பார்த்து
பதிவாகச் சத்துருமித் துருவறிந்து
தளக்கமாய்ச் சரக்குகளைப் பார்த்துநீயும்
தடையறவே சரக்குகளைச் சுட்டுச்சுட்டு
இளக்கமாய்க் கைபாக வரிசைகண்டு
யிதமாகச் செய்திடவே யியற்கையாமே (7)

இயற்கையாய்ச் சாக்கதனைச் சுட்டுப்பாரு
யிதமான சாஸ்திரத்தை யெடுத்துஓது
அயற்கையாய்ச் சொன்னபடி பார்த்து நீயும்
அடைவாக அனல்தனிலே சாக்குக்கட்டி
நயற்கையாய் கைபழகு பணத்தைப்போட்டு
நயமாகச் சுட்டுமே நாட்டிற்தானும்
துயற்கையா யலேந்துமே கேட்டு நீயும்
துடியாகப் பாகமாய்ச் செய்திடாயே (8)

செய்திடவே துரிசினுட சுண்ணங்கேளு
துடியாகுங் கைபாக வரிசைகேளு
பைதிடவே சவுக்கார மில்லாப்போனல்
பதையாமற் கொல்லாது துருசுதன்னே
வெய்திடவே வெல்லாது நீறிடாது
வேதையுந்தான் வாராது வெற்றியில்லே
கைதிடவே சவுக்காரம் யெண்ணெய்வாங்கக்
கதிபெறவே சொல்லுகிறேன் கண்டுகொள்ளே

சவுக்காரம் யெண்ணெய் கழட்ட.

கண்டுகொள்ளு பூனீறு படியும்ரெண்டு
கற்சுண்ணம் படிரெண்டு சட்டியிட்டு
பண்டுபடப் பாணியது படியும்யெட்டு
பதிவாக யிட்டுமே கலக்கி நீயும்
துண்டுபடத் திரிநாள்வை பின்பு நீயும்
துடியாக நீருதனே யிருத்துப்பின்பு
கொண்டுபடத் துத்தமது சேருஒன்று
குணமாகக் கரியில்வைத்து ஊதிக்கொள்ளே 10

துத்தச் சுண்ணம்

ஊதியே யெடுத்துப்பார் சுண்ணமாகும்
உடனெடுத்து முன்னிருத்த சவுக்காரத்தில்
வாதியே துத்தமென்ற சுண்ணமிட்டு
வடிவாக ஒட்டயெரி குளம்புபோல
நாதியே அகப்பையினல் துளாவிக்காய்ச்சி
நலமாகச் சேருபோல் பருவம்பார்த்து
கோதியே சாப்பலது பொடித்து நீயும்
குணமாகச் சுளகுதனி லிட்டிடாயே (11)

இட்டுமே சாணுயரஞ் சாம்பல்தன்னில்
யிதமாக அதின்பேரில் துணிவிரித்து
கட்டுமே சட்டிதனில் காய்ச்சுகின்ற
கனிவான சவுக்காரக் குளம்பு தன்னை
பட்டுமே அகப்பையினுல் மொண்டுஊத்து
பதிவாகப் பத்துண்டை யாகஊத்து
தட்டுமே மேலுமந்தச் சீலையிட்டுத்
தடையறவே யெடுத்துமே பார்த்திடாயே (12)

பஞ்ச சுண்ணம்.

பார்த்திடவே என்றைக்கும் உண்டைப்போலே
பதிவான விளாங்காய்போ லுருட்டுநீயும்
ஏத்திடவே ரவிதனிலே காயவைத்து
யேழைமதி போகாமல் பின்புநீயும்
கோத்திடவே அஞ்சுசுண்ணம் வைக்கக்கேளு
குணமாகக் கிழிஞ்சியொடு அண்டஞ்சங்கு
நாத்திடவே நத்தையொடு சுக்கான்கல்லு
நலமாக வகைக்குஒரு சேருஒன்றே (13)

சேரொன்று கல்வத்தி லிட்டுநீயும்
சிறப்பாகச் சுண்ணும்புத் தண்ணீர்விட்டு
பாரென்று யிருசாம மறைத்துவில்லே
பதிவாகத் தட்டியே காயவைத்து
நானென்று கரியில்வைத்து நன்ருயூது
நலமாகக் கடுஞ்சுண்ண மாகும்பாரு
வாரென்று அஞ்சுசுண்ண மாகும்பாரு
வடிவாக வகையதனை வமுத்தக்கேளே (14)

சவுக்காரச் சுண்ணம்.

வழுத்தவே முன்வைத்த சவுக்காரத்தில்
வகையாக உண்டைமேல் சொல்லக்கேளு
நழுத்தவே அஞ்சுசுண்ணங் கவசமிட்டு
நலமாகக் கட்டியே காயவைத்து
அழுத்தவே பத்தெருவி லடுக்கிப்போடு
அன்பான சவுக்காரச் சுண்ணமாச்சு
பழுத்தவே மேற்கவசந் தள்ளிப்போடு
பதிவாக உண்டைதனைப் பதியவாங்கே (15)

வாங்கியே பீங்கானி லிட்டுப்பாரு
வடிவாகப் பூப்போலே பொருமி நீரும்
தாங்கியே சகலமுந்தான் சுண்ணமாகும்
தடையில்லாச் சவுக்காரம் ஆடுமாட்டு
ஏங்கியே வழலையென்ற சுண்ணமாச்சு
எளிதாகத் துருசதுவுஞ் சுண்ணமாகும்
பாங்கியே துத்தத்தின் மார்க்கந்தன்னைப்
பதிவாக பார்த்திடிலோ பலனுமாமே (16)

பலனாக வழலைதா னிதுவேயாச்சு
பத்தியாய்ச் சவுக்கார மிதுவேயாச்சு
கலனாக வெள்ளையென்ற சாரையாச்சு
கருத்துள்ளே நயமாகள் வைத்துக்கொண்டு
தலமாகச் சவுக்காரம் வேறேயென்று
தாட்டிகமாய்ச் சொல்லிவிட்டார் உலகவாதி
பலமாகப் பூனீற்றை யெடுத்துக்காய்ச்சிப்
பத்தியா யலைந்துமே மாள்வார்பாரே (17)

துருசுச் சுண்ணம்.

மாளாமல் முன்வைத்த சவுக்காரத்தை
மதியாகப் பலம்நாலு நிறுத்துக்கொண்டு
தேளாக வீரமது நாலத்தொன்று
சேர்த்து அறை சிவப்பாகும் பின்பு நீயும்
காளாகத் துருசியென்ற கட்டிமேலே
காரியமாய் லேபித்துக் கதிரில்வைத்து
பாழாகப் போகாமல் அதிலேபின்பு
பதிவாக அஞ்சுசுண்ணங் கவசங்கட்டே (18)

கட்டியே கதிரில்வைத்துக் குக்குடத்தில்
கனிவாகப் போட்டுமே பின்பு நீயும்
தட்டிப்பார் துருசதுவுங் கொக்குப்போலே
தானிருக்கும் அல்லாவைத் தொழுதுபோற்று
முட்டியே கொஞ்சமெடு கையில்வைத்து
முனையான பாணிதனைக் கொஞ்சம்விட்டால்
துட்டியா யாயிரந்தேள் கொட்டல்போல
துடியா யிருந்திடுமீ துண்மைதானே (19)

உண்மையா யித்துருசு காலனைக்கும்
உறுதியால் நபிமார்கள் துருசுதன்னை
தண்மையாய்ச் சுண்ணத்தை வைத்துப்பின்பு
தடையறவே மக்காவின் மேலவாசல்
வண்மையாய்க் கோட்டையது கட்டினார்கள்
வடிவாக மதிலெல்லாந் தங்கமாகும்
பெண்மையாய்த் துருசினுட சுண்ணப்போக்கை
போக்கோடே ஒருவருக்கும் பேசொண்ணாதே()

தாளகச் சுண்ணம்.

பேசவே துருசினுட சுண்ணந்தன்னைப்
பெலமாகப் பலம்நிறுத்துக் கல்வத்திட்டு
தாசமாய்ப் புகைநீரை விட்டுஆட்டித்
தாளகத்தைப் புரட்டியே குறட்டினாலே
வாசமாய்க் கதிரில்வைத்துப் பின்புநீயும்
வடிவாகக் குக்குடமாய்ப் போட்டுப்பாரு
நாசமாய்த் தாளகமுஞ் சுண்ணமாகும்
நமன்விலகும் பாருலகில் நடத்தையாமே (21)

நடத்தையாய்த் தாளகமும் நீறிற்றானால்
நாடுதனில் மண்ணோடு விண்ணுமெல்லாம்
படத்தையாய்ப் பொன்னாகும் லோகந்தன்னில்
பதிவாகப் பாய்ச்சிடவே நீறிப்போகும்
கடத்தையா யுபரசங்க ளெல்லாம் நீறும்
கணக்குண்டோ எச்சரக்குங் கட்டி நீறும்
குடத்தையிட்டுத் தண்ணீரை முகத்தல்போலே
கொள்ளையே கொள்ளையிதில் வாதந்தானே(22)

தங்கச் சுண்ணம்.

தானென்ற தாளகநீர் களஞ்செடுத்து
தடையறவே உமிநீரால் மத்தித்தேதான்
வானென்ற ஏமத்தைத் தகடுவாங்கி
வடிவாக அதன்பேரி லப்பிப்பின்பு
கானென்ற காடையென்ற புடத்திலிட்டால்
கதிபெருக வெடுத்துப்பார் யேமராசன்
பானென்றே நீறிவிடும் பகரப்போகா
பத்திமுத்தி தாளகத்தி நீறுதானே (23)

நீறுதான் யேமமென்ற நீறுதன்னை
    நிலையாக ரவிநூறு ஒன்றுருக்கி
காறுநீ ஒன்றிட்டு உருக்கிப்பாரு
    கண்கொள்ளா மாத்தாருங் கண்டுகொள்ளு
பாறுமே போகாது யிடைதான்வெள்ளி
    பாய்ச்சியிட்டு உருக்கிநீ யெடுத்துப்பாரு
ஆறுமே மாத்தென்ன பத்துமாகும்
    அடைவாகப் புடமிறங்கும் ஆண்மையாமே 24

ஆண்மையாய்ச் சவுக்காரம் வைத்துநீயும்
    ஆடினல் நபிமார்கள் அன்புமெத்த
தாண்மையாய்த் துருசதுவை நீத்திப்பின்பு
    தடையறவே தாளகத்தைப் பின்னே நீத்தி
பாண்மையா யதின்பின்னே தங்கம்நீத்தி
    பாருலகில் நபிமார்கள் தங்கஞ்செய்தார்
வாண்மைபெற யிப்படிக்குப் பார்த்துத்தானும்
    மதிப்பான நபியிலெட்சம் பகரலாமே (25)

பகரவே வழலைவிட்டால் வாதம்பொய்யாம்
    படிப்படியா யேறுதற்குப் பலிதமில்லை
உகாவே கட்டினமு முருக்கினமுமில்லை
    ஓடாசுக் காணில்லாக் கப்பலாகும்
தகரவே பாயில்லாக் கப்பலாகும்
    தாட்டிகமாய்க் காலில்லா மனிதராகும்
துகரவே மரமேறிக் கைவிட்டாக்கால்
    துடியொக்குஞ் சவுக்காரம் விட்டபேர்க்கே (26)

விட்டபேர் தனையொக்கும் வாதமாட்டு
    விதமாக வழலையென்ற சுண்ணத்தாலே
பட்டமது சீர்தப்பில் பாங்காய்ப்பாரு
    பதிவாகத் தானுடும் வழலைமார்க்கம்
கெட்டபேர் தான்விட்டுப் புலம்புவார்கள்
    கேள்விதா னறியாமல் சுட்டுக்கெட்டு
முட்டவே நூல்களெல்லாம் பொய்தானென்று
    மூதறிவு யில்லாமற் பேசுவாரே (27)

பேசுவா ருலகத்தில் வாதிதானும்
பிரித்துமே சாஸ்திரத்தைப் பாராதாலே
ஏசுவார் அழுதிடுவார் துப்பிவைவார்
ஏதுமில்லா உலுத்தரவர் வாதிதானும்
காசுபணம் போச்சென்பார் சவுக்காரத்தைக்
காணேமென்பார் கைபாகந் தெரியாதாலே
வேசிதான் சொன்னதுபோல் சொல்லிச்சொல்லி
வேதாந்த மார்க்கமாய்த் திரிகுவாரே (28)

திரிகுவார் சண்டைசெய்வார் சீசமாவார்
திட்டியே கெட்டமென்பார் நூலைக்காணார்
பிரியமாய்ச் சொல்லிவிட்டுப் பிரட்டுப்பேச்சு
பேதையர்போல் புலம்பியே பிரண்டுருண்டு
விரியமாய்ப் பின்னையொன்று பார்ப்பமென்பார்
விதமில்லார் பதமில்லார் விருப்பமில்லார்
சரியாகக் காரியத்தை யறியான்றன்னை
தானடிப்பாய் ஆயிரத்தின் காலிதானே (29)

தாம்பூரச் சுண்ணம்.

தானென்ற தாளகநீர் தனையெடுத்து
தாட்டிகமாய்க் கல்வமிட்டு வாய்நீராலே
கானென்ற தாம்பூரத் தகட்டில்பூசி
கனியவே காடையென்ற புடமுமிட்டால்
நானென்ற தவளம்போல் நீறுமாகும்
நாடியே நவலோகம் நூற்றுக்கொன்று
பானென்று யிருட்டுக்கு யெல்லாந்தங்கம்
பதிவாக யெடுத்துவித்துச் செலவுசெய்யே (30)

சூதக்கட்டு.

செலவுசெய்து நபிசொத்தைத் தின்று நீயும்
திட்டமாக யிருந்துமே சொல்லக்கேளு
நவமாக விருவியிலை களைப்பிடுங்கி
நன்மையாய்த் தாம்பரத்தின் சுண்ணங்கொஞ்
வலமாக யிட்டுமே பிசைந்துவைக்க (சம்
வடிவாக நீராகும் வண்மைபாரு
கலனில்லா நீரையிறு பின்புதானும்
கனிவாகச் சூதமொரு சேருவாங்கே (31)

வாங்கியே சரண்டியிட்டு விராலி நீரை
வகையாக விட்டுநீ மார்க்கங்கேளு
தாங்கியே சூதந்தான் முழுகவிட்டுத்
தளம்பவே அடுப்புதனில் கொதியிட்டாக்கால்
தூங்கியே சூதமது கட்டிப்போகும்
துடியாக உருக்கியே மத்தங்காயில்
நீங்கியே உள்வைத்துப் புடமும்பத்து
நீதமாய்ப் போட்டுநீ யெடுத்துப்பாரே (32)

ரசமணி.

எடுத்துப்பார் பால்போலே தானிருக்கும்
யிதமாகக் கரியில்வைத்து உருக்கிப்பாரு
அடுத்துமே வெள்ளிபோல் கண்விட்டாடும்
அதையெடுத்துச் சுண்டக்கா யளவதாக
படுத்துமே மணியிருபத் தொன்றுருக்கி
பதிவாகக் கயிறதனில் கோர்த்து நீயும்
தடுத்துமே முடிச்சுத்தான் யிருபத்தொன்று
தப்பாமல் போட்டுமே தாக்கிடாயே (33)

தாக்கிடவே கையதனில் வைத்துநீயும்
தடையறவே மகமதுவை நோக்கிப்பின்பு
வாக்கிட்டுப் பிஸ்மில்லா ரகுமானென்று
வகையாக ஐந்துதரந் தொழுது நீயும்
நோக்கிட்டுக் கால்மடித்துக் கையை நீட்டி
நுணுக்கமாய்க் காதுதொட்டு கண்ணைத்
சொக்கிட்டுத் தொழுது நீ போற்றப்போற்ற (தொட்டு
தொல்லுலகில் ரசவாதத் தொழிலுமாமே (34)

களங்கு.

தொழிலாகக் கட்டினதோர் சூதம்நாலு
தேரத்தரித்து யெடுத்துமே குகையிலிட்டு
வழியோடே உருக்கிடவே உருகி நிற்கும்
வடிவாக நாலுக்கு ஒன்று தங்கம்
துழியாகத் தங்கம்டை நாகம்போட
துப்பறவாய் வாங்கியே உருகிநிற்கும்
பழியாக யெடுத்துப்பார் களங்கமாகும்
பாய்ச்சிடவே நவலோகம் யேம்மாமே (35)

ஏமமாம் நூற்றுக்கு ஒன்றுயீய
யென்நபிமார் சொன்னதிது ஆணிக்கொக்கும்
வாமமாம் உப்புக்குங் காவிக்கப்பா
வடிவாக யிருந்துவிடும் வுண்மைமெத்த
தாமமாம் யிதைவித்துச் செலவுசெய்து
தாக்கிட்டுச் செந்தூரம் பண்ணக்கேளு
நாமமாய்ச் சூதமுண்ட களங்குதன்னை
நாடியே பலம்நிறுத்துக் கல்வத்திட்டே (36)

வேடியுப்புத் திராவகம்.

இட்டுமே புகைநீர்தான் ஒன்றுகேளு
யிதமாக வெடியுப்பு பலமும்பத்து
கட்டுமே சீனமது பலமுங்கேளு
கனிவாக யிருபத்து அஞ்சுமாகும்
நட்டுமே கல்வத்தி லிட்டுக்கேளு
நலமாகப் பொடியாக்கிக் கலையத்திட்டு
மூட்டுமே வாலையென்ற சட்டிமூடி
முனிவாக உளுந்தாலே சீலைசெய்யே (37)

செய்துமே அடுப்பில்வைத்து யெரித்துவாங்கு
செயமாக முன்னீர்தான் வெள்ளையாகும்
பைதுமே வெள்ளையைத்தான் தள்ளியிட்டு
பாங்குபெற மஞ்சள் நீர் வருகுமப்பா
வைதுமே மஞ்சளது நீரைத்தானும்
வடிவாகப் பிடித்துமே குப்பிதன்னில்
நைதுமே அடைத்துவைத்து மறுநாள்தானும்
நலமாகச் சொல்லுகிறே னுட்டுள்ளோரே (38)

களங்குச் செந்தூரம்.

தாட்டியே முன்வைத்த களங்கிலிட்டு
நலமாக யிருசாமங் கரைய ஆட்டி
வாட்டியே பீங்கானில் உமியில்வைத்து
வடிவாக வருத்துமே காசிக்குப்பி
நாட்டியே அரைவாசி அரைத்து நீயும்
நலமாகச் சீலைமண் தான் பிலக்கச்செய்து
பூட்டியே பனிரெண்டு சாமந்தீதான்
போட்டாத்தி யெடுக்கச்செந் தூரமாமே (39)

செந்தூர மாகுமது முருக்கம்பூப்போல்
செல்வமது நவலோகம் நூற்றுக்கொன்று
பந்தார மிட்டுமே உருக்கிப்பாரு
பகலவன்போல் நிறமாகும் பத்துமாத்து
நந்தூரம் உப்புக்குங் காவிக்குந்தான்
நலமாக யிறங்கும்து நபிமார் செய்வார்
சுந்தூரம் வித்துமே செலவுசெய்து
கர்த்தனைத்தான் துதித்துமே கண்டுகொள்ளே

கண்டுகொள்ளு பணவிடைதான் தேனிலுண்ண
கனிபோலா மண்டலத்திற் காயந்தானும்
பண்டுபடும் செவ்வலரிப் பூப்போலாகும்
பதிவாக நரம்பிறுகும் பலிதமுண்டாம்
குண்டதுவுஞ் சதைதனிலே நுழைந்திடாது
குணமாகும் நபிமார்கள் தேகமாகும்
விண்டுமுன்னே மலைதனிலே குத்திறுக்கால்
விதமாகத் தவிடுபொடி யாகுந்தானே (41)

பூரச்சுண்ணம்.

ஆகுமே முன்வைத்த தாளகத்தை
அடைவாகக் கல்வமிட்டு உமிழ்நீர்விட்டு
வேகுமே அதைக்குழைத்துப் பூரமேலே
விதமாக மத்தித்துக் கவசங்கட்டி
நாகுமே காடையெரு புடமும்போட
நலமாக நீறிவிடும் நாட்டிலோர்க்கு
பாகுபெறப் பூரத்தின் நீறுதன்னை
பதிவாக எடுத்துமே பாகஞ்சேளே (42)

வங்கச்சுண்ணம்.

பாகமாய் வெள்ளியத் தகடடித்து
பதிவாகப் பூரநீர் தன்னைப்பூசு
யோகமாய்ப் புடம்போடு வங்கம்நீறும்
உத்தியெடு கல்வமிட்டு உறுதிசேரு
தாகமாய் நாகமதைச் சுத்திசெய்து
தாட்டீகமாய் வில்லைதன்னைச் சாப்த்து நீயும்
மோகமா யதின்மேலே வங்கநீற்றை
மூசிக்கக் கட்டியே புடமும்போடே (43)

போட்டெடுக்க நாகமது சுண்ணமாகும்
புகலரிய சுண்ணமதை யெடுத்துநீயும்
நாட்டிலே செம்புநூ ற்றென்றுக்குத்தான்
நாடியே ஒன்றுகொடுத் துருக்கிப்பாரு
கூட்டியே மாத்துத்தான் பதினாறாகும்
கூகூகூ நபிமார்போல் கொள்ளைகொள்ளு
மூட்டியே வித்துநீ செலவுசெய்து
முடிவான பள்ளிதனைக் கட்டிவையே (44)

கட்டிவைத்தால் பலபேர்கள் தொழுதுகொள்வார்
கனிவாகும் நபிமார்கள் பத்திவந்து
குட்டியே உனக்குமே வரங்கள் தந்து
கூட்டியே மக்காவின் தேசத்துக்கு
மூட்டியே கொண்டுபோய் அல்லாவோடே
முடியவே தெரிசனங்கள் காட்டுவார்பார்
நாட்டியே மகமதுவைக் காட்டுவார்பார்
நலமான பாகமிது நாடிப்பாரே (45)

நாடிப்பார் வாதங்கள் வந்ததானால்
நபிமாரை உறுதியாய்த் தொழுதுகொள்ளு
கூடிப்பார் நூலொத்த குரானைத்தானுங்
குணமாகப் படித்தோதக் குணமுமாகும்
வாடியே திரியாமல் தொழுதிறைஞ்சு
மார்க்கத்துக் கழகாகும் வடிவுமாகும்
கோடிபேர் நபிமார்கள் கண்டுபேசக்
குணமாகும் யென்வசனம் கூறுமாமே (46)

லிங்கச்சுண்ணம்.

கூறாக நாகநீர் தனையெடுத்துக்
குணமாகக் கல்வத்தி லிட்டுநீயும்
காறாக உமிழ்நீரைக் குத்திப்பாரு
கருத்தாகக் குளைத்துமே லிங்கத்துக்கு
பாறாகப் பூசிப்புட மிட்டுப்பாரு
பதிவாக லிங்கமது நீறுங்கண்டாய்
தூறாகச் சொல்லாதே லிங்கநீற்றை
துடியாகத் தங்கமதைத் தகடுதட்டே (47)

தங்கச்சுண்ணம்.

தட்டியே லிங்கநீர் தனையேபூசி
தாக்கிடவே குக்குடத்தில் தங்கம்நீறும்
முட்டியே தங்கநீர் தனையெடுத்து
முடிவாக நவலோகம் நூற்றுக்கொன்று
வட்டியே யிட்டிடவே மாத்துக்கேளு
வடிவாக ஆயிரத்தி யெட்டுமாததுது
கட்டியே திரியாதே யிந்தவித்தை
கனிவாகச் செய்யாதே கண்டுகொள்ளே (48)

சாரக்கட்டு.

கண்டுமே லிங்கநீர் தனையெடுத்து
காரணமாய்ச் சாரத்தின் கட்டிமேலே
பண்டுபட அரைத்துமே கவசங்கட்டி
பதிவாகக் குக்குடத்திற் போட்டுவாங்கு
தொண்டுபடும் நவச்சாரம் தந்தம்போலாம்
துடியாக யெடுத்துமே வைத்துக்கொள்ளு
வண்டுபோல் நாகமதை உருக்கி நீயும்
மயமாக யிலுப்பெண்ணெய் தன்னில்சாயே (49)

நாகக்களங்கு.

சாய்க்கவே நாகமது யெண்ணெய்கக்கும்
சரியான நாகமது சேருஒன்று
மாய்க்கவே குகையிலிட்டு உருக்கி நீயும்
மயமாக உருக்குமுகந் தன்னிலேதான்
வாய்க்கவே கட்டினதோர் சாரந்தன்னை
வடிவாக முகந்தனிலே தூவினக்கால்
ஏய்க்கவே நாகமது கரியிலாடும்
யிதமாகப் புகையாது உறுதிதானே (50)

உறுதியாய்ப் புகையாது நாகந்தானும்
உத்துமே பலம்நாலு வைத்துருக்கி
அறுதியாய்த் தங்கத்தை யிடையேசேரு
அடைவாக உருக்கியே யெடுத்து நீயும்
வறுநியா யுடைத்துமே செம்புபோட்டு
வடிவாக ஒன்றிட்டு உருக்கிப்பார்த்தால்
குறுதிபோல் மாத்தெட்டுக் காணும்பாரு
குணமாக உப்புக்கா விக்குந்தானே (51)

காவிக்குத் தானிறங்குந் தங்கந்தானும்
கனிவாக வித்துமே செலவுசெய்து
நாவியாய் நபிமார்கள் வணங்கத்தானே
நல்லபள்ளி வாசல்தான் கட்டிவைத்து
பாவியாய்ப் போகாமல் தொழுது நீயும்
பதிவாகப் போற்றியே பணிந்து நீயும்
தாவியே அல்லாவைப் போற்றி நீயும்
தடையறவே யாகோபு சாற்றினாரே (52)

சரக்குக்கட்ட செயநீர்.

சாற்றினார் தாளகத்தின் சுண்ணத்தோடே
சரியாக நவச்சாரம் பாதியிட்டு
வாத்தியே அரைத்திட்டுப் பனியில்வைக்க
வடிவாகப் பலபலெனச் செயநீராகும்
பாத்தியாய் சரக்குகளைத் தோய்ச்சுத்தோய்ச்சுப்
பதிவாகச் சூடனுட தீயில்வாட்டி
ஊத்தியே உருக்கிடவே உருகிநிற்கும்
உத்துப்பார் வெகுதொழில்க ளாடலாமே (53)

ஆடவே கட்டினதோர் சரக்குதன்னை
அடைவாக நவலோகந் தன்னிலீய
கூடவே நவலோக மெல்லாந்தங்கம்
குற்றமறப் புடத்துக்கு யிறங்கும்பாரு
வாடவே வித்துமே செலவுசெய்து
வடிவாகத் தொழுதுமே போற்றிசெய்து
ஊடவே உலகத்தில் சொல்லவேண்டாம்
உற்றுப்பார் வேதைமுகம் அறிவார்பாரே (54)

அறிவார்கள் தானிருந்தால் வாதமாகும்
அசடருக்குச் சொன்னாலு லாபமில்லை
வறிவாகப் பொய்சொல்வார் நிலைத்தவாதி
வாதத்தை வழியோடே மிகவும்பார்த்து
குறிவாகக் கைபாக வினைகளெல்லாம்
கூறியே பார்ப்பார்கள் குணமுள்ளோர்கள்
செறிவாகச் சவுக்காரச் சுண்ணத்தாலே
செகத்திலே சகலமெல்லாம் நீத்திவாழே (55)

நீத்திடவே சாக்கெல்லாம் நீறிப்போகும்
நிலையான சாக்கெல்லாம் நேராய்க்கட்டும்
பார்த்திடவே சகலமெல்லாம் நீத்திப்போடும்
பதிவாகப் பொன்னாகும் பாரிலோர்க்கு
ஏத்திடவே பணமாகும் யில்லாப்போனால்
யிதமில்லை சதமில்லை யிடுப்புமாகும்
கூத்திமகன் போலவே அலைவாரித்தக்
கொடுமைக்கு யென்செய்வோம் கூறினோமே

கூறினோம் புல்லறிவாய்ச்சுடவும் வேண்டாம்
குடிகெடுத்த வாதிகளே சொல்லக்கேளு
பாரிலே பாகமாய்ச் செய்துகொள்ளு
பத்தியே உத்தமரைப் பார்த்துத்தேறி
ஊரிலே நூலறிந்து வினையறிந்து
உத்துமே பார்த்திடவே உறுதியுண்டு
நீரிலே சவுக்காரச் சுண்ணம்வைத்து
நேராகப் பிழைப்பதற்குப் பண்ணிடாயே (57)

பண்ணவே முன்வைத்த தாளகத்தைப்
பதிவாக நீறெடுத்து வீரங்காலாம்
உண்ணிடவே சத்துஅரை உமிழ்நீர்விட்டு
உறுதிபெற அயத்தகடு தன்னிற்பூசி
நண்ணிடவே குக்குடத்திற் புடமுமிட்டால்
நாடியே தும்பைமலர் போலே நீறும்
கண்ணிடவே நவலோகம் நூற்றுக்கொன்று
காரணமா யிட்டுப்பார் கருத்துள்ளோரே (58)

கருத்துள்ளே நினைத்துமே யெடுத்துப்பாரு
கனிவாகத் தங்கமது பத்துமாத்து
உருத்தாக வெடுத்துமே வித்துநீயும்
உறுதிபெறச் சவுக்காரம் உண்மைபார்த்து
நருத்தாக வைத்துமே தாளகத்தை
நலமாக வைத்துநீ சாக்கெல்லாந்தான்
பொருத்தவே நீத்திவிடு புலம்பவேண்டாம்
பூவுலகில் ரசவாதம் பேணிப்பாரே (59)

பேணியே செந்தூரங் களங்குபண்ணி
பெலமாக நவலோகம் பழுக்கச்செய்து
ஆணியே வித்துமே செலவுசெய்து
அடைவாகப் பாகமதை அறிந்துகொள்ளு
ஊணியே ஒருவேலை செய்து நீயும்
உறுதியாய் வித்துமே செலவுசெய்து
காணியே கைக்கடங்கப் பண்ணி நீயும்
கருதியே திரிந்துநீ வைத்துக்கொள்ளே (60)

கொள்ளவே நபிமார்கள் சொன்ன நீதி
குணமாகக் கண்டுமே நூலைக்கண்டு
துள்ளியே திரியாதே நூலைப்பாரு
துடியோடு செய்யாமற் கொண்டுநீயும்
புண்ணியமா யருவருப்பைத் தள்ளி நீக்கி
புலப்படவே செய்திட்டுப் பொறுமையாக
நண்ணியே பார்க்கவே உருவுமாகும்
நலமாக யாகோபு நலஞ்சொன்னுரே (61)

நலமான வழலையைத்தான் முன்னேசெய்து
நாடியே துருசுதனை நீத்திப்பின்பு
பெலமாகத் தாளகத்தை நீத்திநீயும்
பிரபலமாய் நவலோக மெல்லாம் நீத்தி
வலமாக ரசங்கட்டி மணியேசெய்து
வடிவாகத் தொழுதிரைஞ்சி வடிவங்கண்டு
குலமாகக் குலத்திலே கூடிவாழு
கூக்குரலாய் ரசவாதம் யேவலாமே (62)

ஏவலாய் முன்வைத்த துரிசுச்சுண்ணம்
யிடைநேரே வீரத்தை விட்டரைத்து
காவலாய்க் காரீயத் தகட்டிற்பூசி
கனமாகப் புடம்போடப் பூப்போல் நீறும்
தாவலே தனையெடுத்து நவலோகத்தில்
தடவியே புடம்போடத் தங்கமாகும்
நாவலே தங்கமென்ன நூறுமாத்து
நலமாக யாகோபு சொன்னவாரே (63)

சொன்னதொரு நூல்தனிலே உழைத்து நீயும்
சுயமாகச் சவுக்காரச் சுண்ணம்பண்ணி
நன்மையாய்த் துருசுதனை நீத்தித்தேர்ந்து
நலமான நபிமார்கள் கோடாகோடி
இன்னிலத்தில் நபிகளிடம் சேர்ந்துபோயி
யிதமாகப் பாகமதைக் கேட்டுக்கொள்ளு
முன்னமே சொல்லிவிட்டேன் சவுக்காரத்தை
முடிவாகப் பார்த்தக்கால் முத்தியாமே. (64)

முத்தியாஞ் சவுக்கார மில்லாச்சுண்ணம்
மூலையிலே போட்டிடு நீ முத்திமுத்தி
சித்தியாய்த் துரிசினுட சுண்ணத்தாலே
சிறப்பாக ரசங்கட்டும் துடியுமெத்த
துத்தியுமாய்த் தாளகத்தை விட்டால்வர்ணம்
துடியில்லாத் திடமில்லை சூதுகண்டு
புத்தியாய்க் கண்டுமே பிடித்துக்கொள்ளு
புலம்பியே திரியாதே போக்குமாமே. (65)

போக்கான மவுனமா யிருந்துகொண்டு
புகலரிய சவுக்காரம் வைத்துத்தேறு
வாக்காகக் கைபாக வரிசையாலே
வகைகண்டு துகையாக வளப்பமாக
நீக்காகப் பொருளறிந்து நிலைமைபார்த்து
நீநிலத்தில் சரக்கைத்தான் மிகவும்நீத்தி
பாக்கியமா யுலகத்தி லிருந்துவாழு
பத்தியுடன் செய்திடவே முத்திதானே. (66)

மூத்தியாய்ச் சவுக்கார வைப்புதன்னை
மூவுலகு மெய்க்குமே நபிமார்சொன்ன
புத்தியாய்க் கண்டுமே தேறி நீயும்
பிசகாமல் கைபாக வரிசைகண்டு
நித்தியமாய் வைத்துமே செய்துபாரு
நீநிலத்தில் வணங்கியே சொல்லக்கேளு
சத்தியமாய்ச் செய்திடவே சித்தியாகும்
சரியான பாகமிது செய்துபாரே. (67)

வங்கச் செயநீர்.

செய்துபார் காரீயம் பலமும்பத்து
செயமாகப் புதுச்சட்டி தன்னிலிட்டு
வைத்துமே உருக்கியே வெடியையாட்டு
பத்தியா யுருக்கியது சுண்ணமாகும்
வைத்துமே சுண்ணயிடை த த்தந்தன்னை
வடிவாக யிடைசமனுய்ச் சேர்த்தரைத்து
கைத்துமே சுண்ணும்புத் தண்ணீராலே
கணக்காக அரைத்துவில்லை கதிரில்வையே ()

கதிரிலிட்டுக் காய்ந்தபின்பு உலையிலிட்டுக்
கணக்காக ஊதிடவே கொடியசுண்ணம்
பதியாக யெடுத்துமே சாரஞ்சேர்த்துப்
பத்தியாய்ப் பீங்கானிற் பனியிலிட்டு
நிதிபெறவே நீராகும் நீருதன்னை
நிலையாக யிருத்துமே குப்பிதன்னில்
விதியாக உளத்தியே களஞ்சிவீரம்
விதமாக யிட்டுமெள்ளப் பனியில்வையே. (69)

பனியில்வைக்கப் பலபலெனச் செயநீராகும்
பதிவாக நீர்தெளியும் பத்திநீரை
கனிவாக யெடுத்துவைத்துப் பின்புதானும்
காரணமாய்த் தாளகத்தை அயச்சட்டியிட்டு
தனியாகச் சுருக்கிட்டுச் சாமம்நாலு
தடையறமே யெடுத்துவே கவசங்கேளு
துணிவாகப் பிட்டுவங்கந் தனையரைத்துத்
துடியாகக் கன்னிப்பால் தன்னிலாட்டே. (70)

ஆட்டியே யிருசாமஞ் சென்றபின்பு
அதைவில்லை கதிரில்வைத்துப் புடமுமிட்டு
நீட்டியே யிப்படிககுப் புடமும்அஞ்சு
நேராக யிட்டுயெடு கொஞ்சந்தானும்
காட்டியே யெடுத்துவைத்துக் கரியினுள்ளே
கனிவா உருக்கிப்பார் சிவந்துஆடும்
தாட்டிகமா யுடைத்துப்பார் வெட்டையாகும்
சரியாகப் பாகநலம் சரியாய்த்தானே. (71)

சரியாக முன்னியம் போலே நின்று
சல்தியா யுருக்கினல் தாரந்தன்னை
பரியாகச் சத்தில்லா உருக்கிற்றுனல்
பதமாகப் புகைநீரா லரைத்துச்சாரம்
விரிவாகச் சுருக்கிட்ட தாரமேலே
விரும்பியே ஒன்றுக்கு நாலாய்க்கட்டு
குரிபோல மேற்கவசங் கட்டி நீயும்
குணமாகச் சேவலென்ற புடத்தில்வையே (72)

வைத்துமே யெடுத்து நீ கல்வமிட்டு
வாகாகப் புகைநீரா லரைத்து நீயும்
முத்துமே தாளகத்தின் மேலேகட்டு
முனிவாகக் கதிர்ல்வைததுக் காயப்போடு
சித்துமே குக்குடத்தில் போட்டுத்தீரு
திறமையாய்க் கல்வமிட்டுப் பின்பு நீயும்
நத்தியே புகைநீரை விட்டுஆட்டி
நலமாகத் தாளகத்தின் மேலேகட்டே. (73)

கட்டியேயிப்படிக்குத் தாழம்அஞ்சு
கனிவாகப் புடமிட்டு யெடுத்துப்பாரு
மூட்டியே கருஞ்சிவப்பு யாகுமபாரு
முனிவாகச் செப்புதனி லிடையேதாக்கு
குட்டியே தாங்கோடு கட்டி னுப்போல்
குணமாக யிருக்குமது தாளகந்தான்
பட்டியே நவலோகந் தன்னிலீய
பதிவாக நொறுங்குமது பண்புமாமே (74)

பண்பாக னுறுங்கியதோர் லோகத்தூடே
பாய்ச்சிடு தங்கமதைப் பரிவாய்த்தானும்
உண்பாகக் கல்வமிட்டுப் புகைநீர்விட்டு
உறுதிபெற யிநசாமம் அரைத்துநல்லாய்
நண்பாக உமிநெருப்பில் வருத்துப்போடு
நலமாகக் காசியென்ற மேருக்கேத்தி
வண்பாகப் பனிரெண்டு சாமந்தீதான்
வடிவாக யெரித்திடவே வர்ணமாமே (74)

வர்ணமா முருக்கம்பூப் போலேவர்ணம்
வடிவாக யெடுத்துமே வகையைக்கேளு
தறணமாய்த் தங்கமென்ற சிமிளில்வைத்துத்
தடையறவே நவலோகம் நூற்றுக்கொன்று
கறணமா யிட்டிடவே மாத்துப்பத்து
கனிந்துமே மகமதுவைத் தொழுதுபோற்றி
பறணமாய் வித்துமே செலவுசெய்து
பதிவான காயத்தை நிறுத்திடாயே. (76)

நிறுத்திடவே பண்விடைதான் மண்டலத்தில்
நினைவாக உண்டுவரக் காயந்தானும்
பறுத்திடவே சடமிருகிக் காயசித்தி
பதிவாகச் செவ்வலரிப் பூப்போலாகும்
வறுத்துமே நோய்தவிடு பொடிகளாகும்
வடிவாகச் செவ்வலரிப் பூப்போற்கண்கள்
நறுத்துமே யிருந்துவிடு விந்துயேறும்
நலமான வாசியாம் நாட்டிலோர்க்கே. (77)

நாட்டிலே வங்கத்தை முன்னூறுதன்னில்
நலமாகச் சொல்லிவிட்டேன் ரெண்டும்ஒத்து
கூட்டியே கழித்துமே பின்புநீயும்
குணமாகச் சரக்குகளை குறித்துப்பார்த்து
தாட்டிகமாய்ச் செய்துவிடத் தங்கமாகும்
தனியாகச் செய்தாக்கால் பலனுமில்லை
ஏட்டிலே யெழுதினது பொய்யென்பார்கள்
யிதமாக யாகோபு சொன்னவாரே. (78)

சொன்னதொரு நூல்பார்த்து வாதமார்க்கம்
சோதித்தால் பலனாகுஞ் செய்துபாரு
கன்னல்போல் ருசியாகப் பார்த்துத்தேற
கனிவாகப் பிலனைக் கண்டுகொள்ளு
தன்னிலே திரியாதே சொன்னேனப்பா
தடையாகா கைபாக வரிசைகண்டு
முன்னமே சொல்லிவிட்ட நூலைப்பார்த்து
முடிவாகச் செய்தாக்கால் முத்தியாமே. (79)

முத்தியாம் சுண்ணமென்ற காண்டத்துள்ளே
    முடிவாக அறுநூறுஞ் சோதித்தேதான்
புத்தியாய்ச் சோதித்து மூன்னூறுபார்த்துப்
    புலன்படவே யிந்தநூல் நூற்றன்பத்தைந்து
சத்தியமாய்ப் பார்த்துமே செய்தாயானல்
    தவமாகும் வாதவருந் தடையேயில்லை
சித்திபெற யாகோபு சொன்ன நீதி
    சிறியோர்கள் செய்துமே பிழைக்கநன்றே.(80)

பிழைக்கவே ரசவாதிக் காகச்சொன்னேன்
    பேருலகில் பிரளாயல் செய்துபாரு
உழைக்கவே உழுதாக்கால் பலனுமாகும்
    உறுதியா யுழையாத வாதிதானும்
கழைக்கவே யிருந்துண்டு சுத்திச்சுத்தி
    கனிவாகப் பொய்கள்தான் சொல்வான்பாரு
தழைத்தபரம் போலவே யிருக்கவேணும்
    தாட்டிகமா யாகோபு சொன்னவாரே. (81)

சொன்னதொரு யென்னூலில் யெல்லாமெய்யாம்
    சொற்பெரிய நபிமார்க ளாடும்ஆட்டு
கன்னல்போல் கருப்புருசி போலச்சொன்னேன்
    காரணமாய் நபிமார்கள் என்மேற்கோபம்
இன்னிலத்தில் யெல்லோருங் கோபமாச்சு
    யிருந்திடத்தி லிருந்துமே வேலைசெய்து
தன்னகரில் சித்தியே பெறலாமென்று
    தாட்டிகமா யாகோபு தான்சொன்னரே. (82)

சொன்னதொரு சுண்ணங்கள் பொய்யேயென்றல்
    சொற்பெரிய வேதமெல்லாம் பொய்யேயாகும்
கன்னல்போல் வேதமெல்லாம் நிசமதாகும்
    கனிவாக வாதம்பொய் யென்றபேர்க்கு
நன்னயமா யவர்வாயில் மண்தான்போட்டு
    நலமாகப் பள்ளிதனில் சமாதுவைப்பார்
இன்னிலத்தி லவர்பேச்சே வேண்டாமென்று
    யிருந்துரைத்தார் யாகோபு யிதமதாமே. (83)

இதமாக நிலைத்ததொரு வாதிதானும்
இன்பதுன்ப மில்லாது பொய்கள்சொல்லார்
பதமாகச்செய் திடுவா ருலகத்திற்றன்
பத்தியாய்க் குருமுடிக்குங் காலங்காண்பார்
நிதமாக அனுசரிப்பார் நேர்மையாக
நிலைதப்பார் தப்பினு லின்னமொன்று
விதமாகச் செய்வார்கள் நிலைத்தவாதி
வித்தகராம் யாகோபு விளம்பினூரே. (84)

கற்சுண்ணச் சவுக்காரம்.

விளங்கியதோ ரின்னமொரு சுண்ணங்கேளு
விதமாக வெகுசுருக்கு முன்னேபாரு
நளங்கியே வெள்ளைக்கல் தனையெடுத்து
நலமாகப் பச்சையாய்க் கல்லைத்தானும்
உளங்கியே ஆயிரங்கல் லெடுத்துநீயும்
உவர்மண்ணு சுண்ணும்பு நேராய்க்கூட்டி
துளங்கியே பாணிபடி யெட்டுஊத்தி
துடியாகக் குமுறவே யெரித்திடாயே. (85)

எரித்திடவே வெள்ளைக்கல் கட்டிப்போகும்
யிதமாகக் காளவாய் தன்னிலிட்டு
விரித்திடவே நீத்தியதைப் பாணிகேளு
விதமாக ஒன்றுக்கு நாலுதண்ணீர்
முரித்திடவே விட்டு அதை மண்டலந்தான்
முட்டியா யிட்டுவைக்க உப்புத்தானும
குரித்திடவே உப்பாகும் உப்பெடுத்து
குலமாக வைத்துமே சொல்லக்கேளே. (86)

சொல்லவே மடையனைத்தான் கரியிலிட்டுச்
சுகம்பெறவே ஊதிவிடக் கடுஞ்சுண்ணமாகும்
மெல்லவே ஊதினதோர் துத்தச்சுண்ணம்
மேன்மையாய்ப் பலம்நாலு கல்வத்திட்டு
நல்லதொரு கற்சுண்ணத் துப்புதன்னை
நாடியதோ ரிடைக்கிடைதான் சேர்த்தரைத்து
பல்லதொரு சுண்ணநீர் விட்டரைத்து
பதிவாக வில்லைதட்டிக் கதிரில்வையே. (87)

கதிரதனில் வைத்துமே காய்ந்தபின்பு
கனிவாக அஞ்சுசுண்ணக் குகையில்வைத்து
நிதிபெறவே புடம்போட்டு யெடுத்துப்பாரு
நிலையாகச் சவுக்காரச் சுண்ணமாச்சு
விதியாகத் துருசுதான் உடனே நீறும்
விதமாகச் சகலமுந்தான் சுண்ணமாகும்
கெதிவேறு யில்லாமல் வாதமார்க்கம்
கேட்டவுடன் தெண்டனிடும் கிருபையாமே. 88

கிருபையாய் முன்வைத்த சவுக்காரத்தைக்
கெருவமா யெடுத்துமே நாலத்தொன்று
தறுபமாய் வீரமது சேர்த்துநீயும்
தடையறவே அரைத்துமே துருசுக்கப்பி
கறுமையாப் புடப்போட்டு யெடுத்துப்பாரு
கனமாகத் துருசதுவுஞ் சுண்ணமாச்சு
உறுவமாய்ச் சரக்கெல்லாங் கெஞ்சியாடும்
உத்தமனே வெகுபோக்கு உறுதிதானே. (89)

உறுதியாய் நீறினதோர் துருசுச்சுண்ணம்
உத்துமே பலம்நாலு யெடுத்துக்கொண்டு
குறுதியாம் வீரமது பலமும்ஒன்றும்
குணமாக ரெண்டுமொன்று யரைத்துத்தானும்
பறுதியாய் மனோசிலையின் மேலேகட்டு
பதிவாகக் கதிரில்வைத்துப் பின்புதானு
முறுதியாய்க் குக்குடத்தில் புடத்தைப்போட்டு
முத்துமே மனோசிலையுஞ் சுண்ணமாமே. (90)

சுண்ணமா மனோசிலையின் சுண்ணத்தோடே
சுகமாக ஆட்டியரை நாலுக்கொன்று
வன்னமா யரைத்துமே வாய்நீராலே
மத்தித்துத் தங்கமென்ற தகட்டிற்பூசு
நன்மையமாங் குக்குடமாய்ப் புடத்தைப்போடு
நாட்டியே தங்கமது நீறிப்போகும்
கன்னல்போல் நவலோகந் தன்னிலீய
காரியமாய்ப் பார்த்திடவே கணக்குமாமே. (91)

கணக்காக நவலோக மெல்லாந்தானும்
காரணமாய்ப் பழுக்குமே கருத்துள்ளோர்க்கு
தணக்கமாய் மனோசிலையின் சுண்ணம்போலே
தனியாக வேலையில்லை தரணியோர்க்கு
குணக்காகச் சொல்லாதே புடமிறங்கும்
குறியாக மனோசிலையின் குறிப்புமெத்த
துணக்காக மனோசிலையின் சுண்ணத்தோடே
துடியாக வீரமது ஒன்றுகூட்டே. (92)

கூட்டியே வாய்நீரா லரைத்து நீயும்
குடியாகச் செம்பென்ற தகட்டில்பூசி
நாட்டியே குக்குடமாய்ப் போட்டுவாங்கு
நலமாகத் தாம்பூரஞ் சுண்ணமாகும்
பாட்டியே தாம்பூர சுண்ணந்தன்னைப்
பதிவாகக் கதலிதான் பழத்திற்கொஞ்சம்
தூட்டியே களஞ்சியிட்டுச் சாமம்வைக்க
துடியாகக் காய்போலே துணையுமாமே. (93)

துணையாகத் தாம்பூர பற்புந்தன்னைத்
துடியாக விராலியிலை தன்னிலீய
அணையாக விராலியிலை தண்ணீராகும்
அடைவாகச் சாறுதன்னைச் சீசாதன்னில்
வணையாக அடைத்துமே பின்பு நீயும்
வடிவாகச் சூதமது சேருயிட்டு
மணையாக அயக்கரண்டி தன்னிலிட்டு
வாகாக அடுப்புதனிற் காயவையே (94)

காயவைத்து யெடுத்துப்பார் சூதந்தானும்
கடிந்துமே யிட்டிலிபோல் கட்டிப்போகும்
மாயவே யெடுத்துமே உண்டைபண்ணி
மயமாக யெலுமிச்சம் பழத்துள்வைத்து
நாயமார் சொன்னபடி புடத்தைப்போடு
நலமாக யிப்படிக்குப் புடமுங்கேளு
ஞயமே யிருபத்தி ஒன்றுபோட்டு
யெழிதாக யெடுத்துமே சொல்லக்கேளே. (95)

சொல்லவே கரியில்வைத்துச் சூதந்தன்னைச்
சுகமாக உருக்கிப்பார் சூதந்தானும்
கல்லவே கரியில்நின்று ஆடுமாடும்
கணக்காக ஆடினதோர் சூதந்தன்னை
மெல்லவே பலம்நாலு வைத்துருக்கி
விருப்பமாய்த் தங்கமொன்று நாகம்ஒன்று
கொல்லவே உருக்கிடவே களங்சமாகும்
கூட்டியிடை நவலோகம் நூற்றுக்கொன்றே·96

ஒன்றாக யிட்டுமே உருக்கிப்பாரு
ஓகோகோ மாத்தென்ன பத்துமாகும்
தன்னுன மலைதனில்சஞ் சரிக்கலாகும்
தடையறவே சூதமுண்ட பேர்க்குத்தானும்
கன்னுன செவ்வலரி போலாந்தேகம்
கனிவாசப் பாகமாய்ச் செய்துதேற
நன்றாகப் பாகம்வந்தால் பலனுமாகும்
நாடியே யாகோபு நலஞ்சொன்னுரே. (97)

சொன்னதொரு மனேசிலையின் சுண்ணந்தன்னைச்
சுகமாகக் களஞ்சிநால் தனை நிறுத்து
பன்னகமாம் பித்தளையின் தகடுதன்னில்
பதிவாகக் கட்டியே புடமுமிட்டால்
நன்னயமாய் வெண்ணீறாய் நீறிப்போகும்
நலமாக நவலோகந் தன்னிலீய
கன்னல்போல் மாத்தென்ன பத்துமாகும்
கடிதாகப் புடமிறங்குங் கண்டுகொள்ளே. (98)

கண்டுகொள்ளு யிதைவித்துச் செலவுசெய்து
கனிவாகப் பள்ளிதனில் போய்த்தொழுது
தொண்டுபடு வேதத்தைப் படித்துத்தேறு
துப்பறவாய் அல்லாவுந் துணையேசெய்வார்
பண்டுமே மனேசிலையின் சுண்ணத்தாலே
பாக்கியங்க ளுண்டாகும் பதிவுமெத்த
மூண்டுமே செய்யாமற் செய்துகொள்ள
மூக்கியமா யாகோபு மொழிந்தவாரே. (99)

மொழிந்திடவே மனேசிலையின் சுண்ணந்தன்னை
முனையான வாய்நீரால் மத்தித்தேதான்
வழிந்திடவே துருசின்மேல் கட்டி நீயும்
வடிவாகக் குக்குடத்தின் புடத்தைப்போடு
நழிந்திடவே வெண்ணீராய்ப் பொறுமிப்போகும்
நாதாந்த சாரமுடன் யெழிதிலாகும்
கழிந்திடவே துருசதுவுஞ் சுண்ணமானால்
காடாகும் வாதமெல்லாங் கண்டுகொள்ளே.100

கண்டுமே துருசதுவின் சுண்ணத்தாலே
கனமான சூதத்தைக் கரண்டியிட்டு
பண்டுமே துருசதுவை விராலிக்கிட்டு
பதிவாக நீர்முறித்து நீரைவிட்டு
மூண்டுமே கொதியிடவே கட்டிப்போகும்
முடிவாகக் கரியில்வைத்து உருக்கிப்பாரு
வண்டுபோ லுருகியது ஆடுமநேர்மை
வடிவாக வெள்ளிபொன்போ லாடலாமே. 101

ஆடுகின்ற சூதமது பலமும்நாலு
அடைவாகத் தங்கமொன்று நாகமொன்று
கூடுகின்ற குகையில்வைத்து உருக்கிப்பாரு
குணமாக யெல்லாமுங் களங்கமாகும்
நாடுமே யிதைஉடைத்து நவலோகத்தில்
நாட்டிடவே நூற்றுக்கு ஒன்றுதாக்க
பாடுமுன்னே தங்கமது உடனேயாகும்
பத்தியாய் உப்புக்குங் காவிதானே. (102)

காவிக்கு உடனேதான் தங்கந்தானும்
கனிவாகப் புடமிறங்குங் கருத்துள்ளோர்க்கு
பாவிக்குக் கிட்டாது வாதமார்க்கம்
பதிவாக நல்லோர்க்குக் கிட்டுங்கிட்டும்
தாவிக்குக் கிட்டினால் தர்மம்பண்ணு
தடையறவே ஞானத்தை மிகவேபாரு
கோவிக்குங் கைகண்ட வித்தைபோல
குணமாகு மணமாகுங் குறுக்குமாமே. (103)

குறுக்காகத் துருசினுட சுண்ணம்வைத்துக்
    குணமாகச் செய்தாக்கால் குறிப்புமாகும்
பறுக்காகச் சவுக்காரச் சுண்ணமில்லா
    பதிவாகத துருசதுதான் நீறபாட்டா
நறுக்காகச் சூதமது கட்டமாட்டா
    நலமாகக் கட்டியே வேலைசெய்தால்
முறுக்காக யெல்லாமுஞ் சித்தியாகும்
    மூதுணர்ந்து பார்த்தாக்கால் யெல்லாமாமே.

எல்லாமு மாகவே சவுக்காரத்தை
    யிதமாக வைத்துமே வேலைசெய்தால்
பொல்லாமை வாராது துருசுநீறும்
    போக்கோடே கருவிதுதான் புகலக்கேளு
நல்லறிவாய்த் தாளகத்தை நீத்திக்கொள்ளு
    நானிலத்தில் நவலோக மெல்லாம்யேமம்
கல்லாத மனிதரிடஞ் சேரவேண்டாம்
    கண்டுமே யாகோபு சொன்னவாரே. (105)

வாரேது யென்றுக்கால் சொல்லக்கேளு
    வகையான சவுக்காரத் தாலேயாச்சு
கூறேது கருவாச்சு கோடிவேதை
    குணங்கெட்டுத் திரியாதே கொள்கியாடு
பார்தனிலே சித்தரெல்லாஞ் சவுக்காரத்தைப்
    பாடியே மறைத்துவிட்ட பரிசுதன்னை
வீறேது உங்களுக்குச் சொல்லிவிட்டேன்
    விதமான சவுக்கார மேவிடாயே. (106)

வெடியுப்புச் சுண்ணம்.

மேவியே வெடியுப்புச் சுண்ணந்தன்னை
    மேதினியோர் மெய்க்கவே சொல்லக்கேளு
காவியமாய் வெடியுப்பு அஞ்சாங்காய்ச்சல்
    கனிவாகப் பலம் பத்து நிறுத்துக்கொண்டு
ஓவியமாய்க் கல்லுரலில் போட்டுநீயும்
    உத்துமே சீனமது பலமும்பத்து
தாவியே யெலுமிச்சம் பழம்பிழிந்து
    தள்ளியே சக்கையது பலமும்அஞ்சே. (107)

அஞ்சோடு யிதுமூன்றும் உரலிலிட்டு
ஆதியா யுலக்கையினு லிடித்துநைய
பிஞ்சோடு மெழுகுபத மாயெடுத்து
பேசாமல் புதுச்சட்டி அடுப்பிலிட்டு
கொஞ்சவே வில்லைபண்ணி அதனிலிட்டு
கெடியாகத் தீப்போட்டு நாலுசாமம்
மிஞ்சவே சங்குபோல் வெளுத்திருக்கும்
மீறுமல் சொல்லுகிற பாகங்கேளே. (108)

பாகமாய்க் கொஞ்சமொடு மஞ்சள் தன்னில்
பதிவாக யிட்டுப்பார் உண்ணிரெத்தம்
யோகமாய்ச் சிவந்தாக்கால் பாகமாகும்
உறுதிபெறச் சிவக்காட்டால் திரும்பத்தானும்
மோகமா யெரித்திடவே சுண்ணமாகும்
முடிவான வெடியுப்புச் சுண்ணமாச்சு
தாகமா யெடுத்துவைத்துப் பின்பு நீயும்
தடையறவே யின்னமொன்று சாற்றுவேனே.

ரச பதங்கம்.

சாற்றுவேன் ரசபதங்கஞ் சொல்லக்கேளு
சரியான சூதமது சேருஒன்று
போற்றவே கல்லுப்புப் படியும்நாலு
புகலரிய செங்கல்மா ரெண்டுமாகும்
ஏற்றவே யிதுரெண்டு மிடித்துச்சட்டி
யிதமாக அடிகனத்த சட்டிதன்னில்
நாற்றிசையு மெய்க்கவே அமுக்கி நீயும்
நலமாக நடுவிலே பள்ளம்பண்ணே. (110)

பள்ளமாய்ப் பண்ணியே சூதமிட்டுப்
பதிவாக மேற்சட்டி மூடி நீயும்
துள்ளாமல் யேழுசீலை மண்ணுஞ்செய்து
துப்பறவா யடுப்பேத்தி யெரிக்கக்கேளு
விள்ளாதே ஒருவருக்குந் தீபமாகும்
விதமாகக் காடாக்கினி யாயெரித்து
தள்ளாதே பனிரெண்டு சாமந்தீதான்
தாட்டிகமா யெரித்தாத்து தருணமாமே. (111)

ஆத்தியே சட்டிதனைத் திறந்துபாரு
அமர்ந்துமே உயரஅது யேறித்தானும்
கூத்திபோல் தும்பைமலர் போலிருக்கும்
குணமான பற்பமிது காரம்றெம்பு
சாத்தியே மயிற்குச்சி யால்வழித்து
தடையறவே சேரொன்று நிறுத்துநீயும்
பாத்திபனுர் மெய்க்கவே கல்வத்திட்டுப்
பதிவாக யின்னமொன்று பகரக்கேளே. (112)

பகரவே முன்வைத்த வெடியுப்புச்சுண்ணம்
பதிவான ரசபதங்க மிடையேசேர்த்து
நகரவே பழச்சாற்றல் சாமமாட்டி
நலமாகச் சூடனைத்தான் கொழுத்திவிட்டு
உகரமே வில்லைதனை வாட்டி நீயும்
உத்துமே யெடுத்துநீ கல்வமிட்டு
தகரமே சாரமது இடையேசேர்த்துத்
தாட்டிகமாய் ரவிதனிலே வைத்திடாயே.(113)

வைத்திடவே பலமலெனச் செயநீராகும்
வாகான யின்னீரில் வீரமிட்டு
கைத்திடவே சீசாவி லடைத்துநீயும்
கனமான நபியாரைத் தொழுதுபோற்றி
எத்திசையு மெய்க்கவே தொழுதுநீயும்
எனையாண்ட அல்லாவை யிருதயத்தில்
முத்திபெறத் தொழுதுமே யிருந்தபின்பு
மூவுலகுக் கரசாநீ முயற்சிகேளே. (114)

முயற்சியாய் வெடியுப்புச் செயநீராலே
மூவுலக மெய்க்கவே கல்லுப்புத்தான்
அயற்சியாய்த் தெரிப்படங்கிக் கட்டிப்போகும்
அறிவான துருசியது சுண்ணமாகும்
நயற்சியாய்க் காரமுதல் கட்டிப்போகும்
நவச்சாரங் கட்டியே தந்தமாகும்
துயற்சியா யின்னீரிற் பாஷாணந்தான்
துடியான சுண்ணமாந் தோய்ந்துபாரே. (115)

துருசுச் சுண்ணம்.

தோய்ந்துமே செயநீரைப் பீங்கானிட்டு
துடியான துருசியது பலமும்நாலு
ஆய்ந்துமே வெடியுப்புச் செயநீர்தன்னில்
அன்பாகத் தோய்த்துமே பட்சம்போடு
காய்ந்துமே கதிரவன்முன் போட்டுவாநீ
கடிதான பசப்பத்து வெள்ளையாகும்
தாய்ந்துமே முன்வைத்த சவுக்காரத்தை
நலமாக மேல்கட்டிப் புடத்தைப்போடே. (116)

போடவே துருசதுவுஞ் சுண்ணமாகும்
புகலரிய சுண்ணத்தால் வேதைகோடி
ஆடவே அண்டாண்டந் துளைத்துஆடும்
ஆதியாம் வெடியுப்புச் செயநீராலே
கூடவே பொன்பிறந்து துருசியாலே
குணயான தாளகத்தால் பொன்னுரெம்ப
நாடவே சகலமுந்தான் சித்தியாகும்
நாதாந்த சாரமெல்லாம் நொடிக்குள்ளாச்சே.

ஆச்சப்பா துருசுதான் சுண்ணமானல்
அண்டரண்ட பேரண்டம் நொடிக்குள்ளாச்சு
நீச்சப்பா வெகுநீச்சு யென்றுசொல்லி
நிலையில்லா தென்றுமே சொல்லவேண்டாம்
காச்சினதோர் பால்போலே ருசிக்குங்கண்டாய்
கண்கொள்ளா வேதையாங் கண்டுகொள்ளு
பாச்சப்பா வெகுசுளுக்கு பரிவாஞ்சுண்ணம்
பத்தியுடன் செய்வதற்கு முத்திதானே. (118)

தாளகச் சுண்ணம்.

முத்தியாந் தாளகமும் பலமும்பத்து
முனிவான சுண்ணைம்பு நீரில்சுத்தி
நித்தியமாய் அயச்சட்டிக் குள்ளேயிட்டு
நிலையாக வெடிநீரைச் சுருக்குப்போட்டு
சத்தியமாய் யிருசாமஞ் சுருக்குப்போட்டு
சரியான முன்துருசுச் சுண்ணந்தன்னை
பத்தியாய்க் கட்டியே புடமுமிட்டால்
பதிவாகத் தாளகந்தா னீறுமாமே. (119)

நீருன தாளகத்தைக் கல்வத்திட்டு
நிலையாகத் துருசியொரு பலத்தின்மேலே
காருன கவசமது கட்டி நீயும்
கனமில்லா தெருவடுக்கிப் புடமுமிட்டால்
வாருன கொக்கதுபோல் நீறிப்போகும்
வடிவான துருசினுட நீறுதன்னை
தாருன நவலோகம் நூற்றுக்கொன்று
தாட்டிகமா யிட்டிடவே யேமமாமே. (120)

ஏமமாந் தாளகத்தை நீத்தினுக்கால்
எளிதிலே தங்கமாம் யின்பமுண்டு
காமமாம் பெண்ணாசை தன்னைவிட்டுக்
கைப்போடு புளியுப்பு யெண்ணெய்விட்டு
தாமமாம் பணவிடைதா னுண்டுவா நீ
தாக்கிடவே மேனியது தங்கமாகும்
வாமத்தை யுண்ணாதே யென்றுசொல்லி
வகையான யாகோபு வழுத்தினாரே. (121)

பாஷாணச் சுண்ணம்.

வழுத்தவே வெள்ளிவித்தை ஒன்றுகேளு
வாகாக வெள்ளையென்ற பாஷாணந்தான்
அழுத்தவே வெள்ளாவி தன்னிற்றானும்
அடைவாகச் சுத்திசெய்து யெடுத்து நீயும்
பழுத்தவே அயச்சட்டிக்குள்ளேயிட்டு
பண்பாக வெடியுப்புச் சுருக்குச்சாமம்
தழுத்தவே போட்டுமே யெடுத்து நீயும்
தண்மையா யதின்மேலே கவசங்கேளே.(122)

கவசமென்ன துருசினுட சுண்ணத்தாலே
கனிவாகக் கவசமிட்டுக் கட்டி நீயும்
துவசமாய்க் குக்குடமாய்ப் போட்டுவாங்க
துடியாக வெள்ளைப் பாஷாணந்தானும்
தவசமாய் நீறியது சுண்ணமாகும்
தடையில்லாச் சுண்ணமது ஆச்சுதென்று
குவசமாய் வெள்ளீயம் நீரைவாங்கும்
கூக்குரலாம் வெள்ளியது கொள்ளையாமே.123

கொள்ளையாம் வெள்ளீயம் நூற்றுக்கொன்று
கொடுத்திடுவா யுருக்குமுகந் தன்னிற்றானும்
பள்ளையாம் வெள்ளியது ஆடும்பாரு
பதிவாக வங்கமது கொடுத்துஊது
தள்ளையாம் சுயவெள்ளி யாகும்பாரு
தனையெடுத்து வித்துமே செலவுசெய்து
துள்ளையா யுண்டுடுத்தித் தொழிலைப்பாரு
துடியான பாகமிது தோய்ந்துபாரே, (124)

தோய்ந்துபார் வெள்ளைப் பாஷாண நீற்றை
துடியாக மத்தித்துத் துருசுக்கப்பி
வாய்ந்துபார் கதிரில்வைத்துக் காயப்போடு
வடிவாகக் குக்குடத்தில் சுண்ணமாகும்
நாய்ந்துபார் துருசினுட சுண்ணந்தன்னை
நலமாகப் பித்தளையில் நூற்றுக்கொன்று
பாய்ந்துமே கொடுத்திடவே வெள்ளிதானும்
பதினாறு மாத்தாகும் பண்புமாமே. (125)

பண்பாகத் துருசினுட நீறுதன்னை
பதிவாக யிரும்புதனைத் தகடடித்து
உண்பாக மேல்தடவிப் புடமுமிட்டால்
உறுதிபெற வெள்ளியாம் உத்துப்பாரு
தண்மையாம் நவலோக மெல்லாம்வெள்ளி
சரியான பாகமிது கண்டுகொள்ளு
வண்மையா யிந்தவெள்ளி வித்துநீயும்
வடிவான பள்ளிதனைக் கட்டிவையே. (126)

கட்டிவைத்து உள்ளே நீ சென்றுபுக்கு
கனிவாக மேல்நோக்கி அல்லாவைத்தான்
துட்டியாய்த் தொழுதிரைஞ்சிப் போற்றிசெய்து
துடியாக மனதுள்ளே புக்கிச்சென்று
குட்டிபோ விரையாதே மகம்மதுவைக்
குணமாகத் தொழுதிரைஞ்சு குணமதாக
நட்டியே திரியாதே மிதப்பதாக
நலமாகப் பின்னுமே நாட்டங்காணே. (127)

கரணவே கைபாகந் தப்பிற்ருனல்
கனிவாகத் தங்கமில்லை கண்டுகொள்ளு
வாணவே சுருக்காலே சரக்குச்சாகும்
வடிவான சுண்ணமதைக் கவசங்கட்ட
தோணவே சவுக்காரத் தாலேயாச்சு
துடியான தாளகத்தா லெல்லாமாச்சு
வேணபடி செய்யாம லுண்மையாக
விருப்பமாய்ச் சகலமுந்தான் சித்தியாமே. ()

சித்தியா யாகவென்ருல் சொல்லக்கேளு
சிறப்பான சவுக்காரச் சுண்ணத்தாலே
முத்தியாய் வெடியுப்புச் சுண்ணத்தாலே
முனிவான சகலசரக் கதனைக்கட்டும்
பத்தியாய்ச் சுண்ணத்தைப் பண்ணி நீயும்
பதிவாக நவலோகங் கொடுத்துத்திரு
நித்தியமாய் நவலோகம் பழுக்கும்பாரு
நீனிலத்தில் யாரோபு சொன்னவாரே. (129)

சொன்னதொரு யிக்காண்டந் தன்னிற்தானும்
சுருதிபெற நூற்றன்பத் தஞ்சுதன்னில்
நன்னயமாய்ச் சவுக்காரம் வைத்து நீயும்
நலமாகக் கருவாகச் சொன்னேன்பாரு
இன்னிலத்திற் கருவாக எண்ணிப்பாரு
யிதமாகச் சகலமெல்லாஞ் சித்தியாகும்
தன்னகரில் கைபாக வரிசைகண்டு
தாக்கிடவே யெல்லாமு நன்மையாமே. (130)

கல்லுப்புக் கட்டு.

நன்மையாய்க் கல்லுப்புக் கட்டுக்கேளு
நலமாகக் கல்லுப்பு மணியாய்வாங்கி
உண்மையாய்ச் சீவியெடு விளாங்காய்போலே
உறுதியாய்ச் சீவியே பின்பு நீயும்
தன்மைபெற வெடியுப்புச் செயநீர்தன்னில்
தாட்டிகமாய்ப் பட்சமொன்று வைத்துப்போடு
வண்மையாய்க் கதிர்தனிலே காயவைத்து
வடிவாக மேல்கவசம் வண்மைகேளே. (131)

வண்மையாய் முன்வைத்த சவுக்காரத்தை
　　வளமாகக் கட்டியே கதிரில்வைத்து
உண்மையாய்க் குக்குடத்திற் புடத்தைப்போடு
　　உறுதிபெறக் கவசத்தைப் பிரித்து நீயும்
தண்மைபெறக் கரியில்வைத்து உருக்கிப்பாரு
　　தடையறவே கரியில் நின்று பொன்போலாடும்
கண்மையா யாடாது போனால்பின்பு
　　கனிவாக முன்போலே துவைத்துப்போடே.

போட்டுமே சவுக்காரங் கவசங்கட்டி
　　போக்கோடே முன்போலே புடத்தைப்போடு
நாட்டுமே யெடுத்துப்பார் தங்கம்போலே
　　நலமாகக் கரியில்நின்று ஆடும்பாரு
பூட்டுமே யிதுபூட்டுச் சொன்னேன் நானும்
　　புகலரிய கைபாக வரிசையாலே
காட்டுமே காணு நீ யெல்லாந்தானும்
　　கரியில்வைத்துக் கல்லுப்பு மணிபோலாமே. ()

மணியான உப்புநின்று உருகும்போது
　　மாட்டுமே நாலுக்கு ஒன்றுதங்கம்
தணியான தங்கமது ஒன்றுபோடு
　　தாக்குகின்ற தங்கயிடை நாகம்போடு
பணியாக உருக்கிடவே யெல்லாய்சேர்ந்து
　　பதிவாகக் களங்காகும் யெடுத்துவைத்து
நணியாக நபிமாரைத் துதியேசெய்து
　　நாடியே பின்புதான் நாட்டங்கேளே. (134)

நாட்டமாய் நவலோகம் நூற்றுக்கொன்று
　　நாடியே யிட்டிடவே மாத்துப்பத்தாம்
கூட்டமாய்ப் புடத்துக்குங் காவிக்குந்தான்
　　குணமாக யிறங்கிவிடுங் கூர்மைமெத்த
தூட்டமாய் யிதைவித்துச் செலவுசெய்து
　　துணையாகச் சோறுக்கி யெல்லோர்க்குந்தான்
மூட்டவே கொடுத்துவிடு பின்பு நீயும்
　　முனிவாக அதன்பின்னே சொல்லக்கேளே.

கல்லுப்புச் சேந்தூரம்.

சொல்லவே களங்கதுவும் பலமும்நாலு
துடியான கல்வமிட்டுத் தொக்கவேதான்
மெல்லவே வெடியுப்புச் செயநீர்விட்டு
விதமாகச் சாமம்ரெண்டு விரசாயாட்டி
கல்லவே உமிநெருப்பில் வறுத்து நீயும்
கனிவாகக் காசியென்ற மேருக்கிட்டு
வல்லமையா யெரித்திடவே முருக்கம்பூப்போல்
வடிவாகச் சிவப்பாகும் வாதமாமே. (136)

வாதமாம் நவலோகந் தன்னிலீய
வடிவான் மாத்தென்ன பதினாறுகும்
நீதமாய்ப் பணவிடைதான் தேனிலுண்ண
நிலையாத காயமிது காயசித்தி
பேதமில்லா நோயெல்லாந் தவிடுமாகும்
பிரபலமா யாகோபு சொன்ன நீதி
சாதகமா யிம்மொழிகள் நிசமதாகும்
சரியான பாகமிது சார்ந்துபாரே. (137)

சார்ந்துபார் உப்பைவிட்டு வாதம்பார்த்தால்
சரியான வாதமில்லை தயங்குவார்கள்
பார்ந்துபார் சுட்டுமே தவிப்பாரப்பா
பகாறிய வெடியுப்புச் சுண்ணமில்லா
தார்ந்துமே சாக்கடையி லெறியலாகும்
தவித்துமே திரிந்தலைவார் சவங்கள்வாதி
ஊர்ந்துமே நடப்பார்க ளொன்றுங்காணார்
உலுத்தரச வாதிதா னுண்மையாமே. (138)

தானென்ற நூல்தனிலே வெடியுப்பைத்தான்
தடைபடவே சொன்னார்கள் உலுத்தரப்பா
ஊனென்ற வாதிமார் செய்துபார்த்து
உப்புத்தா னின்னதென்று அறியாமற்றான்
கானென்ற புளியறியார் மலத்தைத்தானே
கடுமையா யெடுத்துமே சுண்ணஞ்செய்து
ஊனென்று கருத்துமே யெறிவாரப்பா
உற்றுணர்ந்து பாராதார் உறுதிதானே. (139)

உறுதிதா னறியாமல் உலுத்தமாண்பர்
ஒருகோடி வேதைகளும் பார்த்துப்பார்த்து
அறுதியே கூட்டியே சுட்டுக்கெட்டு
அடைவாகப் பொய்சொல்லிச் சோறுமில்லா
குறுதிபோல் கக்கியே திரிவார்பாரு
குணமில்லார்க்கொன்றுமில்லை குறுக்கிச்சொல்லி
நிறுதியாய்ப் பொய்சொல்லிப் புலம்புவார்கள்
நிலையில்லார்க் கொன்றுமில்லை நிலைமையாமே.

நிலைமையா யிருந்துமே பாகமாக
நிறுத்தியே நூலதனைப் படித்துத்தேறி
அலையாமல் கைபாக வரிசைகண்டு
ஆதியாய்ச் செய்துமே கடையில்விற்பார்
உலையாமல் சாஸ்திரத்தைப் பேசுவார்பார்
உறுதிமிகச் சொல்லியே புலம்பிநிற்பார்
கொலைகளவு மிவ்வாதி செய்யாமப்பா
கூடாதே யென்வசனம் பொய்போகாதே. (141)

போகாதே சவுக்காரச் சுண்ணத்தாலே
புகழ்பெரிய சகலசித்து மாடலாகும்
வாகாமல் வெடியுப்புச் செயநீராலே
வடிவான சரக்கெல்லாங் கட்டலாகும்
தாகாகத் துருசினுட சுண்ணத்தாலே
சகலசித்து மாடலாந் தடையேயில்லை
வேகாத காலேது சாகாக்காலு
வெந்தாக்கால் சுண்ணமெல்லாம் விருப்பமாமே

வேடியுப்பு மோர்.

விருப்பமாய்ச் சவுக்காரம் பலமும்பத்து
விதமான வெடியுப்புச் செயநீர்பத்து
அருப்பமா யிதுரெண்டுங் கலக்கிவைக்க
அன்பாகத் தயிர்போலே யிருக்கும்பாரு
குருப்பாக மத்தினால் கடைந்துபாரு
கொள்கியே வெண்ணெய்தான் வருகுமக்காள்
திருப்பார்வை யாகவே வெண்ணெய்தன்னைச்
சீக்கிரமா யெடுத்துவைத்துச் செயலைக்கேளு ()

கேளுமே அடியில்நின்ற மோருதன்னைச்
செயமாக தாளகத்தில் சுருக்குத்தாக்கு
பாளுமே போகாதே சாமமொன்று
பதிவாகத் தாக்கியே ரவயிற்போட்டு
நாளுமே வெண்ணெய்த்னை மேலேபூசி
நலமாகக் காயவைத்துப் பின்புநீயும்
வாளுமே சூடனுட தீயில்வாட்டு
வடிவயபோ லுருகியது மஞ்சளாமே. (144)

மஞ்சளாங் கரிதனிலே வைத்துருக்கு
வடிவாக ஓடாது ஒளிந்திடாது
துஞ்சவே அரிதாரங் கட்டிப்போகும்
துடியான தாளகத்தின் கட்டுநாலு
தஞ்சமாய் குகையில்நின்று உருகும்போது
தாட்டிகமாய் நாலுக்கு ஒன்றுதங்கம்
வஞ்சமாய்த் தங்கமிடை நாகம்போடு
வடிவாகக் களங்காகும் வண்மையாமே. (145)

வண்மையாய் நவலோகம் ஆயிரத்துக்கொன்று
வடிவாக யிட்டிடவே மாத்துக்கேளு
தண்மையாம் மாத்தது ஆயிரத்தியெட்டு
தடையில்லா தெல்லாந்நீ தாங்கிப்பாரு
உண்மையாய் விற்காதே சிலவாகாது
உறுதியாய் வைத்துமே பள்ளிதன்னில்
கண்மையாய்த் தொழுதிறைஞ்சிக் குரான்தன்னைக்
கருதியே பூசிக்கக் கருதுவாயே. (146)

கருதியே பூசித்துக் குளிகைதன்னைக்
கனமாக வாயில்வைத்துப் பார்க்கும்போது
வருதியே ஆயிரத்தி யெட்டுமாத்தை
வடிவாகக் கைதனிலே வைத்துநீயும்
உருதியாய் நபிமார்க ளுன்னைக்காணபார்
உற்றுமே யிம்மாத்தைக் கண்ணிற்கண்டால்
பருதியே நபிமார்க ளுன்னைததானும்
பார்த்துமே தொழுவார்கள் பலன்சொல்வாரே.

சொல்வார்கள் கைலாகு கொடுப்பாரப்பா
சுருதிபெற உபதேச மிகவுஞ்சொல்வார்
வெல்வார்கள் தானிருக்கு மிடத்தைச்சொல்வார்
விதமாக நிசஞ்சொல்வார் விருப்பமாக
நல்லோர்கள் நலமாகப் பேசுவார்கள்
நானிலத்தி லுன்னைத்தான் விரும்புவார்கள்
கல்லுமையாய் வேதங்கள் ரெம்பச்சொல்வார்
கனிந்துமே பலனுண்டாங் கணக்குமாமே. 148

கணக்காகத் தாளகத்தைக் கட்டிநீயும்
கனிவாக உருக்கியே தங்கஞ்செய்து
வணக்காகச் செந்தூரம் பண்ணக்கேளு
வடிவாகப் புகைநீரை விட்டுநீயும்
பணக்காக ஒருகோடி வித்தைக்காகும்
பதிவாகச் செந்தூரம் பண்ணிஉண்ணு
கணக்காகக் காயசித்தி உடனேயாகும்
கண்டுரைத்தார் யாகோபு கருத்தில்தானே. 149

தானேதான் நூல்தனிலே யாகோப்சொன்ன
சரியான வாதத்தை நன்றாய்க்கண்டு
நானேநா னென்று சொல்லிப் பாகமாக
நாடியே வைத்துமே வேலையாரு
கானகத் திருந்துமே கண்டுகொள்ளு
கருதியே ஒருவேலை தெரிந்தபின்பு
ஊனேநீ காயசித்தி உடனேபண்ணு
உறுதியா யாகோபு ஓதினாரே. (150)

ஓதினேன் சகலநூ லெல்லாம்பார்த்து
உற்றுமே கைபாக வரிசைகண்டு
நீதியாய் நிலையறிந்து செய்தாயானால்
நீனிலத்தில் ராசாவாம் நேர்மையாகும்
ஊதியே சரக்குகளை அனலிற்போட்டு
உறுதியாய்க் கொளுத்தினால் நாகமெய்தும்
வாதியாய்ப் பேரெடுக்க வேண்டாமப்பா
வடிவான பொன்னைத்தான் வாங்கார்தானே. ()

வாங்கார்கள் வாதங்கள் கிடைத்தபோது
வடிவாகப் பொய்யென்பார் மடையரப்பா
தூங்கியே வயித்தியன்போல் நின்று நீயும்
துடியான வாதத்தைச் செய்துபாரு
ஏங்கியே திரியாதே நூலைப்பாரு
எளிதல்ல ரசவாதம் இருந்து நீயும்
தாங்கியே ஊமைபோ லுண்டுடுத்தி
தாட்டிகமா யிப்புத்தி அறிவில்செய்யே. (152)

அறிவிலே வைத்துமே பொன்னைவிற்று
அடைவாக ஒருவருக்குங் காட்டொணாது
குறியாகக் கண்டானால் உன்னைத்தானும்
குடிகேடு செய்வார்கள் உலகோரப்பா
பிரியமாய்ச் சொல்லிவிட்டேன் தலைகள்போகும்
போக்கோடே புத்திகள்தான் மிகவுஞ்சொன்
வறியவர்போ லிருந்துமே வாதம்பாரு (னேன்
வண்மைதான் யாகோபு வழுத்தினேனே. (153)

நூல் தொகுப்பு.

வழுத்தினேன் சுண்ணமென்ற காண்டந்தன்னை
வடிவாக அறுநூறு முன்னேபார்த்து
தழுத்தவே அதன்பின்னே முன்னூறுபார்த்து
தடையறவே வரிவரியாய்ச் சோதித்தேறி
கழுத்திலே ஆபரணம் போட்டாப்போலே
கனிவாக நூற்றைம்பத் தைந்தையுந்தான்
பழுத்துமே பார்த்துப்பின் மற்றென் நூலை
பதிவாகப் பார்த்தாக்கால் பண்புமாமே (154)

பண்பாக யிந்தநூற் றன்பத்தஞ்சில்
பதிவான சவுக்காரச் சுண்ணஞ்சொன்னேன்
தண்பாகத் துருசினுட சுண்ணஞ்சொன்னேன்
நாடியே கைபாக வரிசைகண்டு
உண்பாகச் செய்துமே செந்தூரித்து
உடனுண்ணு காயசித்தி உடனேயாகும்
கண்பாகத் தங்கங்கள் மிகவுஞ்செய்ய
காதலா யாகோயு கருதினேனே. (155)

கருதியே அல்லாவைத் தொழுதுபோற்றி
கருத்துணர்ந்த நபிமாரைத் தொழுதுபோற்றி
வருதியே மகமதுவைத் தொழுதுபோற்றி
வடிவான வேதத்தைத் தொழுதுபோற்றி
உறுதிபெறக் கருவாக யிந்த நூலே
உண்மையாய்ப் பாடிவிட்டே னுலகந்தன்னில்
இருதயத்திற் கற்றுணர்ந்தால் வாதமாகும்
எழுதினேன் நூற்றிஅன்பத் தைந்துமுற்றே()

யாகோபு அருளிச்செய்த
சுண்ணக்காண்டம் 300-க்குச் சூஸ்திரம் 155
முற்றிற்று.

உ

குருவேதுணை.

யாகோபு அருளிச்செய்த

# சூஸ்திரச் சுருக்கம் 57.

நாத ஞகிய நல்லதோர் சித்தர்தம்
பாதக் தன்னைப் பணிந்திந்த மக்கத்தில்
வேதமாக விளங்கு மெய்ஞ் ஞானியை
நீதமாக நிதந் தொழு தேத்துவாம்.

ஏரியதோர் வளர்ந்தபிண்டம் சுண்ணம்நாலு
இதமாகப் படியளந்து தோண்டியிட்டு
மீரியதோர் தோண்டிதனி விட்டமுக்கி
மேதினியிற் நவச்சாரம் பலந்தான்பத்து
கூரியதோர் பொடியாக்கி நடுவில்வைத்துக்
குணமாக மேற்றேண்டி கவிழ்த்துமூடி
நாரியதோர் சீலைசெய்து அடுப்பிலேற்றி
நலமாக யெரித்திடுவாய் சாமம்பத்தே (1)

பத்திட்டுக் கடுமையா யெரித்துஆத்திப்
பணியவெடு பிரித்திடவே மேலேயேறிச்
சத்துநிற்கும் பார்குச்சி தன்ஞற்றுனே
தனைச்சுரண்டி பீங்கானிற் பனியில்வைக்க
நித்தியமாம் செயநீராம் வெள்ளம்போலாம்
நிலைக்கவெடு சீசாவி லடைத்துநீயும்
முத்திபெருந் துருசுதன்னைத் தோய்த்துப்போட்டு
முதன்மைபெறவெட்டுநாட்டோய்த்துப்போடே

போட்டுமே சுண்ணம்பு வீரம்நேரே
பொருந்தமஞ்ச ளாந்துருசு மேலேகட்டு
நாட்டுமே கலசமிட்டு அங்கியிட்டு
நலமாகக் குக்குடத்தில நீறிப்போகும்
கூட்டுமே நீலனிடை சூதப்போட்டுக்
கூட்டியரை சாரநீர்தனிலே
வாட்டுரச கற்பூரம் நாலுக்கொன்று
வகையாக நிறுத்திட்டு அரைத்துக்கொள்ளே()

கொள்ளப்பா முன்னீரா லரைத்துச்சாமம்
குணமாகக் குக்குடமாய்ப் போட்டெடுக்கத்
தெள்ளப்பா குருவாகுந் துருசுசெம்பில்
திறமாக உருக்கியிடை குருவைத்தாக்கு
மெள்ளப்பா அதைவாங்கித் தட்டத்தூளாம்
வெள்ளியது நால்சேர்த்து ஊதிப்போடு
நல்லதங்க மூதினதோ ரிடைக்குச்சேரு
நலமாக உருக்கியே தகடுதட்டே. (4)

மெல்லவே கல்லுப்புப் பலமும்நாலு
மேன்மைபெற்ற செங்கல்மா மூன்றுமாகும்
கொல்லவே பொடித்துமிதற் குள்ளேவைத்துக்
கொடுமையாய் மூன்றுபுடம் போட்டுவாங்கு
மல்லாத்திப் புடமிறக்குந் தங்கந்தானும்
மயமாகுங் கொண்டிடவே வெண்மையாக
எல்லார்க்கு மேலான குருவைப்பேணி
இன்னமதின் பாகமதை யியம்பக்கேளே. (5)

கனகமது ரெண்டிடைதா னுருக்குமந்தக்
கனகத்தை யெடுத்துமெள்ள வித்துக்கொள்ளு
ஜனமத்த யிடந்தனிலே நின்றுவாழும்
இனிதான ஞானத்தி னியல்புபாரு
உனவுடனே ஆறுதல மேறிப்பாரு
உத்தமித்தாய் வந்துநிற்பாள் உலகந்தன்னில்
சனகனருள் பெறுவீரா மிந்தப்போக்குத்
தாவ்ஸ்டிகவான் யாகோபுச் சொன்னவாரே. (6)

சட்டியிட்டு யிரும்புஅரப் பொடியும்பத்துத்
தாக்கிவிடு தாளகமவ் விடையேசேர்த்துக்
கொட்டிவிடு கலையத்தி லிட்டுப்பாணி
குண்மாக நாளொன்று அரைத்தெடுத்து
மூட்டியிட்டு யிருக்கும்அரப் பொடியும்பத்து
முடிவாகத் தாளகமவ் விடையேசேர்த்து
ஒட்டிவிடு குகையிலிட்டு உருக்கிப்பாரு
உறுதிபெறக் கால்நிறகும் உற்றுப்பாரே. (7)

எடுத்துப்பா ரிருப்பதுவுங் கவிந்துநல்ல
இசமான தாளகத்தி னீயமாகும்
அடுத்துநிறு காலாகும் வீரம்போட்டு
அதையரைத்துப் பொற்றலையின் நீரினாலே
விடுத்துப்பார் வில்லைபண்ணிப் புடமூன்றிட்டால்
விதமாகச் செந்தூரம் பூப்போலாகும்
கொடுத்துப்பார் துருசினுட செம்பில்நூறு
குணமாக வொன்றிடவே யேமமாமே. (8)

ஏமமாம் புணவிடைதான் தேனிலுண்ண
இருந்தவிடந் தெரியாது சிலேற்பனங்கள்
காமமா மிகுதியுறும் வாயுவெல்லாங்
கடல்புக்கும் பித்தமுந்தான் காணுதோடும்
வாமமாம் பெண்கள்தான் மயங்குவார்கள்
வடிவதுதான் செவ்வலரி போலாம்மேனி
சோமன்போ லாகுமிந்தச் செந்தூரந்தான்
சொல்லரிது யாகோபு சொன்னதாமே. (9)

கருநாகந் தனைக்கரண்டி தன்னிலிட்டுக்
கரிதனிலே உருக்கிஅசம் நீரிற்சாய்த்து
வழிநாகஞ் சத்தியதாம் குகையிலிட்டு
வகையாக உருக்கியிடை அரிதாரத்தைப்
பரிவாகக் கிராசமிடு நொறுங் கய நல்லாய்ப்
பார்த்துயெடு கல்வமிட்டு அரையன்னத்தால்
சிறிதாக வில்லைபண்ணி அங்கியிட்டுத்
திடமாக மாளமட்டும் புடத்தைப்போடே. (10)

போட்டுபுடஞ் சிவக்குமட்டும் போட்டெடுக்கப்
பொறுமையுடன் செம்பருத்தம் பூப்போலாகும்
தாட்டிகமா யெடுத்துவைத்துத் துருசுச்செம்பில்
தனையுருக்கி யிடைகொடுக்கத் தூளாய்ப்போகும்
காட்டாதே யித்தூளை மதியில்நாலில்
கணக்காக வொன்றிட்டு ஊதிப்போட்டு
வாட்டமுடன் யேமமிடை சேர்த்துருக்கு
வகையாகத் தகடுதட்டிப் புடத்தைப்போடே. ()

இறங்குமது திரியிடையி லொன்றுதப்பும்
இதமாக யெடுத்துவித்துச் செலவுசெய்து
நிறங்களது குன்றுமற் செந்தூரத்தை
நிர்ணயமா யுண்டிடவே காயந்தானும்
உறங்குமது தாதுக்க ளிறுகிப்போகும்
உதிரத்தின் நோயெல்லா மொழிந்துபோகும்
வரங்களது முண்டாரு மயக்கந்தீரும்
வழுத்தினேன் யாகோபு வளமாய்த்தானே. (12

எப்படியும் பிழைப்புக்கு வாதஞ்சொன்னேன்
இறசூலின் கிருபையதா லின்னஞ்சொல்வேன்
செப்பமுள்ள மக்கமதீ னத்துக்கேகித்
திரும்புகையில் மெய்யென்ற தேசந்தன்னை
இப்புவியில் நெடுநாளா யிருப்பதற்கு
யெத்தனையோ பாகமது சொல்லிவைத்தேன்
முப்பொருளை யறிந்துநீ சுண்ணமுப்பு
முடிப்பதற்கு வகையான கூத்துத்தானே. (13)

கூத்தனிடை வாழ்மடந்தை யிடையேசேர்த்துக்
குழிக்கல்வ மிட்டரைத்து யெருக்கம்பாலால்
நேத்தியதா யரைத்துருட்டிக் கதிரில்வைத்து
நேருள்ள அப்பிரகம் வீரங்காலாம்
பார்த்துமரை பாணிய்தால் வெண்ணெய்யாகும்
பதிவாகப் புடமிட்டு யெடுத்துக்கல்வம்
சேர்த்துஅரை பாணியுமுன் னுண்டைமேலே
செப்பியிடு உண்டையொன்று கவசம்நாலே (14

கவசமது கட்டி அன்னந் தன்னிலிட்டுக்
கனியவதை மேல்மூடிச் சுண்ணத்தாலே
துவசமெரி அடுப்புதனிற் கபேமாகத்
தூக்கியிரு சாமமெரித் தெடுத்துப்பாரு
நவசமது மேற்கவசம் பிரித்துத்தள்ளி
நாடியெடு குழிக்கல்வ மிட்டுநன்றாய்
உவசமதா யுண்டையிடை யிரதஞ்சேர்த்து
உண்மையுள்ள வீரமது அரைக்கால்போடே.()

போட்டுபச்சைக் கற்பூர மரைக்காலிட்டுப்
புகலரிய அன்னமென்ற சோத்தாலாட்டி
நீட்டுவில்லை அங்கியிட்டு யெடுத்துமேலே
நிலவரமாய்த் துணிசுத்திச் சுண்ணமுப்பும்
காட்டுமதை யரைக்கட்டு பெரியதாகக்
கருத்துறவே புடம்போடக் குருவுமாகும்
தேட்டிவரும் சொன்னேன்யா கோபுயானும்
திறமாகக் களங்கமிது செய்துபாரே. (16)

களங்கத்தைத் துருசுடனே செம்பிரண்டிற்
கணக்காக வொன்றிடவே பொடியுமாகும்
உளங்குளிர மதியதனை ஊதிப்போடு
உண்மையுள்ள பட்டமதிற் பாதியேயாம்
தளம்பவதைத் தகடடித்துப் புடங்களிட்டால்
தப்பாமல் யேமமாம் தாங்கியாடும்
பழம்பழுத்த வாறொக்கும் வாதமாகும்
பதிவான யாகோபு பலன்சொன்னாரே. (17)

பொய்யாது வாதங்கள் களங்குமார்க்கம்
போக்கோடே செய்தாக்கால் யேமமாகும்
வையகத்திற் காட்டாதே செயலைத்தானும்
வடிவான பொருளறியார் மாடுமொக்கும்
மெய்யாகச் சொன்னாலும் வருத்தமாண்பர்
மேதினியிற் பொய்யென்பார் முழுமூடர்தான்
கைதனிலே வெண்ணெய்தனை வைத்துக்கொண்டு
கனிவாக வுருக்கறியார் கருத்திலாரே. (18)

அரிதாரம் நாற்களஞ்சி அயமும்நேராய்
அதையரைத்து உருக்கிமெள்ளக் கல்வத்திட்டு
பெரிதான நாகமது களஞ்சிநாலாம்
பிசகற்றுல் வீரமிட்டு நையத்தட்டி
விரிவாக அரைத்துநாக மல்லிச்சாற்றுல்
விதமாக வில்லையங்கு புடமுமிட்டால்
குறிபோலா மஞ்சளது வெல்லாம்பற்பம்
கூட்டியெடு மூன்அயத்தி லிடையேசேரே. (19)

இடைசேர்த்துப் பொற்றலையா லாட்டிவில்லை
எடுத்துகதிர் காயவைத்துப் புடமூன்றிட்டு
தடையறவே சிவப்பாகு மெடுத்துநல்ல
தக்குமுள்ள துருசுாவி மட்டம்போலாம்
விடையாகச் சேர்த்திடவே யேமமாகும்
வெற்றிபெறப் பணவிடைதான் தேனிலுண்ணத்
தடைபடா நோயெல்லாந் தவறிப்போகும்
தாட்டிகமா யாகோபு சொன்னவாரே. (20)

குருட்டுநாய் ஈசலைத்தான் தாவித்தாவிக்
குணமற்று ஊளையிட்ட குணமதாகும்
திருட்டுநாய் சிறுவீட்டி னுள்ளேசென்று
திடமாகக் கதவடைத்து அடிபட்டாப்போல்
இருட்டரைக்குட் புகுந்தகள்ளன் யிடிபட்டாப்போல்
இனமாகக் கைபாகந் தெரியாமாண்பர்
உருட்டுகின்ற தேங்காயை நாய்போலொக்கும்
உண்மையாய்ச் சொன்னேன்யா கோபுதானே.()

சரக்கதனை யரைக்கவதன் காரந்தாக்கிச்
சரியாகக் கண்சிவந்து குதறிற்றனல்
பறக்கவெடு வெண்கலத்தின் கிண்ணிதன்னைப்
பாங்காகக் கவிழ்த்துபழச் சாற்றையூத்தி
உறக்கவுமை துருப்பிடித்த வட்டிதன்னில்
உரைத்துமே களிம்பாக்கிக் கண்ணிலிட்டால்
குறைகண்ணி லிட்டிடக்கண் வலியும்நீங்கும்
குற்றமற யாகோபு குணஞ்சொன்னரே. (22)

வாதவயித் தியந்தன்னை யொருவருக்கும்
வகைகாட்டில் நாகமது உனக்குமாகும்
வேதமது நரல்வேதத் தொகுப்பாய்நின்ற
வினையமுள்ள கைபாக மறியவேணும்
யோகம்வந்து ஒருபொருளைக் கற்றுக்கொண்டால்
ஊமையதை ஒருவருக்கும் சொல்லப்போகா
சூதமுனி யிம்மார்க்க மருளிச்சொன்னார்
சுயமாக யாகோபு சொன்னவாரே. (23)

வாருனக்கு உலகத்தில் வாதஞ்சொல்லி
வகையான பண்டிதமும் வகையுஞ்சொன்னேன்
சாருவேன் கைபாக வரிசைபாரு
சரிவரவே களங்கமுதற் சாட்சிசொன்னேன்
பேருலகு தனில்மாட்டு நடப்பும்பார்த்துப்
பேதாபே தங்களெல்லாம் பெருமைகண்டு
காருலவு பரிகாரம் முன்னேசெய்து
கர்த்தனுட வாதத்தைப் பின்புசெய்யே. (24)

வாசுகியி னிடைசமமாய்க் காரிசேர்த்து
வட்டமிட்டு உருக்கியிடு அன்னந்தன்னில்
நீசமறச் சாய்த்துயெடு ரெண்டுபத்து
நிலவரமாய்க் களிம்பு அறுங் குகையிலிட்டு
ஆசையுடன் அரிதார மிடையேதாக்கு
அதுகருக்குங் கல்வமிட்டு அன்னந்தன்னால்
தாசமற அரைத்துவில்லை கரியில்வைத்துத்
தாட்டிகமாய்ப் புடம்போட்டு யெடுத்துப்பாரே.

எடுத்தன்ன மதிலிட்டுச் சாமமெட்டு
இழுத்தரைத்து இப்படியே சிவக்கமட்டும்
அடுத்துவிடு செந்தூரம் முருக்கம்பூப்போல்
அதையெடுத்துத் துருசுரவி நூறென்றிட்டால்
கொடுத்துவைத்த யேமமா மிந்தவித்தை
கொள்ளைகொள்ளை யாயிருக்கும் வாதமாட்டு
தொடுத்தகை பாகத்தை மறக்கவேண்டாம்
தொல்லுலகில் ரசவாதத் தொழிலுமாமே. (26)

கண்டுயெடு பணவிடைதான் தேனிலுண்ணக்
கதிர்மதியாந் தேகமது கற்றூணாகும்
தொண்டுசெய்வா ருலகத்தோர் சொல்லவேண்டாம்
தோகையர்தான் வசமாவார் துலங்கத்தானும்
பண்டுசெய்த பழவினைகள் தீர்ந்துநல்ல
பதிவான பிணியகலும் கடலேபுக்கும்
வண்டுமயிர் போலாகும் பாகமாக
வழுத்தினர் யாகோபு வண்மையாமே. (27)

நாகமது பவளம்போற் களங்குதானும்
நற்சிவப்புச் செந்தூரம் அலரிப்பூப்போல்
பாகமது சுண்ணமுமல் லிகைப்பூப்போலாம்
பதிவான மெழுகதுதா னிளக்கமாகும்
தங்கமது தயிலந்தான் நிறங்கறுப்பு
தாஷ்டிகமாய் நிறங்களறி மருந்துதன்னை
யோகமது வந்திடுங்காண் பாகமாகும்
யூகமாய் யாகோபு உரைத்தேன்பாரே. (28)

சத்தெடுத்தாற் கறுப்பாக விருக்குப்பாரு
சரியான அயஞ்சேர்த்தா லிப்படிக்கு
முத்தான வெண்காரஞ் சேர்த்துருக்க
முடிவான அயக்கசட்டை நீக்கும்நீக்கும்
நத்தியே சத்திநிறஞ் சிவந்துகாணும்
நலமில்லை யென்றுமே பெறியவேண்டாம்
சித்தான அயத்திலுள்ள செம்பெடுத்தாற்
சீமானாய்ப் போகலாந் தெளிந்துபாரே. (29)

நல்லாகச் சிவந்தசத்தைக் கல்வத்திட்டு
நலமான புகைநீரை விட்டுப்பார்க்க
எல்லாமுந் துருசதுபோல் நீலமாகும்
இதனைவைத்து உருக்கினு லோடிப்போகும்
வல்லமையாய்க் கேசரியைச் சட்டியிட்டு
வகையாக உருக்குமுகந் தன்னிலீயச்
சல்லாப மாய்ச்சாமம் வைத்தெடுத்துத்
தாம்பிரத்தில் மெய்க்களங்கு தாக்கிடாயே. (30)

இழுத்ததொரு செம்பைத்தான் காரஞ்சேர்த்து
இயல்பாக உருக்கிப்பார் செம்புமாகும்
வழுத்தவே மதியேழு செம்புமூன்று
வகையாகச் சேர்த்துருக்கித் தங்கஞ்சேர்த்து
அழுத்தமுள்ள தங்கமடா ஆணிக்கொக்கும்
அடைவான செம்பிடைக்குத் தங்கங்கூட்டிப்
பழுக்க அடி தகடாக அடித்து நீயும்
பாங்காகக் களங்குபண்ணிற் சித்தியாமே. (31)

அடுத்து நின்ற அயச்செய்பிற் தங்கந்தானும்
அடைவாகப் பிறந்ததினால் நிறத்தைக்கேளு
கொடுத்துவைத்த பசுமையாம் நிறங்குன்றாது
குணமான யீயத்திற் பிறந்ததங்கம்
நடுத்தரமாம் நிறங்கேளு ஆணிக்கொப்பாம்
நலமான தாளகத்திற் பிறந்ததங்கம்
பழுத்துமே பழுப்பான தங்கமாகும்
பகரரிய கெந்தகத்தின் பரிசுகேளே. (32)

நல்லாகச் சாரைக் காசுமாகும்
நல்லதங்க மாயிருக்கும் நாட்டம்பாரு
சொல்லான முன்னோர்கள் சொன்னசொல்லைத்
துப்பறவாய்ச் சோதித்துப் பார்த்துச்சொன்(னேன்
எல்லாமுஞ் சூதத்திற் பிறந்ததங்கம்
இயல்பான பீர்க்கம்பூ நிறமுமாகும்
பல்லாமல் வீரத்திற் பிறந்ததங்கம்
பாலான வெள்ளை நிற மாகுந்தானே. (33)

உண்டான தங்கத்திற் பிறந்ததங்கம்
உறுதிபெற நிறமதுவை சொல்லக்கேளு
கண்டான தங்கம்போல் நிறமுமாகும்
கருத்தான தாயைப்போற் பிள்ளையாகும்
விண்டான நிறஞ்சொன்னேன் பக்கமுள்ள
வேதைமுகங் கண்டுயா கோபுதானும்
பண்டான பாகமதைச் சொல்கிறேன்கேள்
பக்குவமாய் எல்லாமும் நீற்றத்தானே. (34)

எல்லாமும் நீற்றுதற்கு உபாயங்கேளு
எரிபுளுகு வீரமொடு பூரம்வண்டு
வல்லான உரஞ்சூதஞ் சவுக்காரந்தான்
வகையான கார்முகிபுஞ் சூடனோடு
நல்லாக யிதுசேரீற் பொருமி நீறும்
நாதாக்கள் சொன்னதிந்த நாட்டப்போக்கு
செல்லாத யிடங்களிலே செலுத்தாதென்று
செப்பினார் யாகோபு திறமிதாமே. (35)

உண்டான களங்குகள்தான் செய்தபோது
உறுதிபெறப் புடம்போட லாகாதென்று
கண்டவுடன் சரக்கெல்லாஞ் சேர்த்தரைத்துக்
கனிவாகக் கதிரில்வைத்துக் காயப்போட்டு
பண்டான சுடர்க்கொடியோன் பலமெடுத்துப்
பதிவாக நாலாகப் பிரித்து நீயும்
முண்டாகக் கொழுத்தியே களங்கையிட்டு
முதிராம லஞ்சுதரம் வாட்டிக்கொள்ளே. (36)

வாட்டியே குகையிலிட்டு உருக்கித்திரு
வகையாகக் காரமது கூடச்சேர்த்து
கூட்டியே உருக்கிடவே சத்தில்நின்ற
குணமான கசடகலும் சிவந்துநிற்கும்
தாட்டிகமாய்ப் புகைதீரை விட்டு நீயும்
தன்மைபெற நாளெட்டுப் பார்க்கும்போது
நீட்டிவிடும் நீலம்போற் குழம்பாய்நிற்கும்
நேராக வொட்டிடவே யெரித்திடாயே. (37)

நல்லாக யெரித்திடவே உருகிநிற்கும்
தாட்டிலே யிச்செம்பை யெடுக்கக்கேளு
வல்லமையாய்த் துருசினுட செம்புருக்கு
வகையாக இடைக்கிடைதான் கிருசம்போடு
வெல்லவதை யிழுத்திடுங்காண் மட்டஞ்சேரு
விதமாகச் தங்கத்தைச் சேர்த்துவூத
எல்லாமுந் தங்கமாம் நேர்மைபாரு
இதமான யாகோபு யெழுதினாரே. (38)

சொன்னபடி செம்புதான் வருகாப்போனல்
சொற்பெரிய வங்கத்தை வெடியுப்பாலே
முன்னமே சொன்னபடி வருத்துச்சேர்த்து
முக்கியமா யுலரவைத்துச் சத்திரேடே
நன்னயமாய்ச் சேர்த்தரைத்து உருக்கித்தீரு
நல்லசெம்பு பிடித்திழுக்கு மதியிற்ருக்கு
கன்னல்போல் மதிதன்னிற் ருக்குந்தங்கம்
கனிவாகச் சேர்ந்தூதத் தங்கமாமே. (39)

நல்லாகச் சததில்நின்ற செம்புதானும்
நாடியே வருகாமற் போனுக்கேளு
உல்லாச மானகே சரியைத்தானும்
உத்துமே சட்டியிட்டு உருக்கும்போது
வில்லாகப் புகைநீரிற் பிரிந்துநின்ற
உறுதியாய்க் குழம்புதன்னை யதிலேதாக்கு
கல்லாகச் சேர்த்தசெம்பை யிழுத்துக்கொள்ளும்
கழிந்துமே மதிதனிலே தாக்கிப்பாரே. (40)

அடுத்துநின்று சேர்த்தசெப்பு மதியிற்ருனும்
அடைவாகச் சென்றுபுக்குந் தங்கஞ்சேரு
கொடுத்துருக்கித் தகடுதட்டிப் புடத்தைப்போடு
குணமுள்ள தங்கமிரண் டிடையும்நிற்கும்
படுத்துமே போகாது களங்குதங்கம்
பாரகடையில் சொல்லிவிட்டேன் கைபாகந்
எடுத்தாக்கா லெப்படியும் பலனுமாகும் (தான்
ஏழையாம் வாதிக்குச் சொன்னவாரே. (41)

சத்திலுள்ள செம்பெடுக்க யீயச்செம்பு
சரியான கேசரியு மூன்றுபேரும்
நத்திபிடித் தெடுத்துமெடுக்காமற்போனல்
நலமான தங்கமில்லை பிரட்டிலோர்க்கு
முத்திபெறச் சத்திலாச் செம்பைச்சேர்த்து
மூவுலகும் மெச்சமதி தன்னிலீய்ந்தால்
சுத்திநிற்குந் தீயைவிட்டுச் செம்புதானும்
துரிதமாய்க் கழன்றுவிடுந் திணணத்தானே. ()

களங்கு செய்து புடமபோட்டு யெடுக்கவேண்டாம்
கனிவாகச் சூடனுட தீயிலவாட்டு
உளங்குளிரச் சாகாது உயரும்மாத்து
உயர்வான லோகமுந்தான் பழுத்துப்போகும்
வளங்களாய் வாட்டையிலே நெருப்புமிஞ்சில்
வடிவாக வில்லையது உதித்துப்போகும்
தளங்கள்பெற வுறத்தூது நன்ருய்த்தானே
தடையறவே தப்பிஞற் கறடுமாமே (43)

நல்லறிவாய் யுபரசங்கள் நவலோகங்கள்
நாட்டிலே பாஷாணங் காரசாரம்
சொல்லுமுன்னே சூதமுதற் செந்தூரிக்கச்
சுருதிபெற மால்தேவி சிலைதான்கெந்தி
கல்லான கெவுரியப் பிரகந்துத்தம்
கடிதான வெடியுப்பு யிவைகள்சேரில்
உல்லாச மாகவிது சேர்த்தாயாகில்
உண்மையா யெல்லாமுஞ் சிவந்துபோமே. ()

சாயமா யினச்சரக்கைச் சாற்றக்கேளு
தடையற்ற வுப்போடு நாகந்தங்கம்
மாயமதா யிரும்போடு நிமிளைசூதம்
வடிவுபெறக் கெவுரியுட வர்ணமாகும்
நாயமா ரிதையறிந்து சொன்ஞாப்போ
நான்பார்த்து உங்களுக்கு நடத்தைசொன்
காயமது நிலையில்லை கண்டுமுன்னே (னேன்
கணக்காகச் செந்தூரா முண்டுதேறே. (45)

எச்சரக்குங் கட்டவொரு செய்திகேளு
இனியவெடிச் சுண்ணத்தாற் சரக்குக்கட்டும்
தசையற்ற திராவகத்தால் சரக்குக்கட்டும்
தற்செயலாந் தயிலத்தாற் சரக்குக்கட்டும்
இச்சையுடன் செயநீராற் சரக்குக்கட்டும்
இதமான மெழுகாலே சரக்குக்கட்டும்
நச்சரவ மூலிகையாற் சரக்குச்சாகா
நாகரீக யாகோபு நலஞ்சொன்ஞரே. (46)

தசையற்ற திராவகத்தால் சரக்சூக்கட்டும்
சரியான ஐப்பசிகார்த் திகையுமாகும்
பத்துருக்கு மார்கழியு மிக்காலத்திற்
பதியவே உருக்கியெடு எலும்புபோலாம்
நத்தியே உபரசங்க ளெல்லாஞ்சத்தாம்
நலமாக முன்னோர்கள் சொன்னசொல்லை
நித்தியமும் பார்த்தறிந்தே னிவைகளெல்லாம்
நிதானித்தேன் யாகோபு நிசஞ்சொன்னேனே.

குருமுடிக்குங் காலமது மாசியாகும்
குணமாகும் பைங்குனியுந் தையுமாகும்
வருகுமது செயநீருங் கேணிநீர்போல்
வாகாக யெடுக்கெடுக்க வெள்ளமாகும்
திருமுகமாஞ் சரக்கெல்லாங் கட்டுங்காலம்
க்ஷேணத்திலே வாதமுமாஞ் செயலோமெத்த
உருக்கினமுங் கட்டினமும் நல்லதாகும்
ஊத்தமுறை யகோபு வோதினாரே. (48)

செந்தூரக் காலமது ஆடிமாதம்
சிவந்திடுமா வணிபுரட் டாசிதன்னில்
அந்தமுடன் புகைநிற்குங் காலமாகும்
அறிவாயக் காலத்திற் செய்துகொள்ளு
வந்ததொரு காலத்தில் வண்மையாகும்
வகைகண்டு சரக்குமுதல் சிவந்துநிற்கும்
முந்துவினை காலத்திற் செந்தூரத்தை
முனிவாக உண்டிடவே சித்தியாமே. (49)

புடம்போடுந் திட்டங்கள் பேசக்கேளு
பேரான யெருவொன்று காடையாகும்
நடம்போடுங் கவுதாரிப் புடமும்நல்ல
நாடியே யெருமூன்று ஞானிக்குத்தான்
விடம்போடு பத்தெருவிற் புடமுமாகும்
விராட்டிதான் எனத்தின் செயலுக்குத்தான்
கடம்போடு அறைதோறு மமுக்கிநல்ல
கனமாகப் போடவது கணக்குமாமே. (50)

திட்டமா பெருநூறு கனபுடந்தான்
திடமான கெசபுடமும் ஆயிரந்தான்
வட்டமா யடுக்கிப்புடம் போட்டெடுத்தால்
வகையாமற் சாரவரும் பரிவுமெத்த
விட்டகுறை வந்தாலோ கிட்டும்பாரு
விடுபடா திருந்தாக்கா லெல்லாம்பாழாம்
சட்டமதா யாராய்ந்து நூல்கள்பார்த்துத்
தாக்கினுர் யாகோபு தன்மைதானே. (51)

சுண்ணமது செய்யவென்றால் துருத்தியொன்று
துடியாக ரெண்டானுல் உருக்கலாகும்
நன்னயமாய்ச் சத்துவென்ற செம்புக்குத்தான்
நாட்டிடுநீ நால்துருத்தி நல்லதாகும்
கன்னல்போ லுருகியது சத்துமாகும்
களிம்பறவே யுருக்கிற்பொன் நிறம்போலாகும்
இன்னிலத்திற் பாகமது யியல்புமெத்த
இருந்துரைத்தார் யாகோபு யினியவாக்கே (52)

பதங்கமது வைப்பதற்கு யெரிப்புக்கேளு
பதியவொரு விறகுதான் தீபமாகும்
விதங்களாம் விறகிரண்டு கமலமாகும்
விறகஞ்சாம் விறகுகாடாக் கினியுமாகும்
அதங்களாம் முத்தீயு மருளிச்செப்தேன்
அருள்பெருகும் பற்பஞ்செந் தூரமெல்லாம்
இதமாக விட்டுவிட்டு யெரிக்கவேணடாம்
இன்பமா யொருவிதமா யெரித்துக்கொள்ளே.

சத்துருக்கும் குகையதனைச் சொல்லக்கேளு
சரியான பொருக்குமண் ணீராருகூட
நத்தியிடும் உமிக்கருக்கு ஆறதாகும்
நலமான கழுதைமலம் ரெண்டதாகும்
முத்திடும்வெண் கற்பொடிமா விரண்டினேடு
முனிவான சீலைசுட்ட சாம்பல்ரெண்டு
நித்தியமாய் கடுக்காயின் கசாயத்தாலே
நிலைக்கவிடு வுரலிலிட்டு மூசைபண்ணே. (54)

பண்ணிடு நீ குகைபண்ணு யதிலேவைத்துப்
பதிவாக உபரசங்கள் உருக்கிப்பாரு
தண்ணீர்போ லுருகுமது குகையும்போக
த்ாக்கியெடு இழியாது உரத்துநிற்கும்
விண்ணிலிடி விழுந்தாலு முடையாதப்பா
விரும்பியிந்தக் குகையிலிட வலுவுமெத்த
உண்ணமது உபரசங்கள் சத்துமாகும்
உத்துணர யாகோபு உரைசெய்தாரே. (55)

சொல்லாய்ந்த பெரியோர்கள் சொன்னசொல்லைத்
துறந்தார்கை பாகமதாய்ப் பார்த்துத்தேறி
நல்லாய்ந்து நூல்வளமை கண்டுதேறி
நாட்டினேன் யெழுநூற்றுச் சொட்சமாக
வல்லவர்கள் காண்பார்கள் சாஸ்திரத்தை
வகையில்லார் காணவுமே மாட்டாரென்று
உல்லாச மாகவேதான் வாழ்வீரென்று
உறுதிபெற்ற யாகோபு உண்மைதானே. (56)

ஒருதரத்துக் கிருதரமாய்ப் பார்த்துப்பாகம்
உறுதியொடு பாகம்வரும் மெழுகுமாகும்
பெருகுமது பாகம்வந்தா லனேகலாபம்
பெற்றிடுங்காண் ரசவாத வித்தைதானும்
திருகுவது வாரர்மற் செய்துதேறு
திட்டமுடன் வயித்தியங்கள் நன்றாய்ப்பாரு
குருவதுதான் நூலாகும் படித்துத்தேறு
கொட்டினேன் யாகோபு குறிப்புத்தானே. (57)

யாகோபு சுண்ண சூஸ்திரச் சுருக்கம் 57

முற்றிற்று.

உ

சுண்ணக்காண்ட சூஸ்திரம் 155-க்கு

# பொருளடக்க அட்டவணை.


| நெ. | பெயர். | பக்கம் நெ. |
| --- | --- | --- |
| 1 | துருசுச் சுண்ணம் ... | 2 |
| 2 | சவுக்காரம் எண்ணெய் கழட்ட ... | 3 |
| 3 | துத்தச் சுண்ணம் ... | ,, |
| 4 | பஞ்ச சுண்ணம் ... | 4 |
| 5 | சவுக்காரச் சுண்ணம் ... | ,, |
| 6 | துருசுச் சுண்ணம் ... | 5 |
| 7 | தாளகச் சுண்ணம் ... | 6 |
| 8 | தங்கச் சுண்ணம் ... | ,, |
| 9 | தாம்பூரச் சுண்ணம் ... | 8 |
| 10 | சூதக்கட்டு ... | ,, |
| 11 | ரச மணி ... | 9 |
| 12 | களங்கு ... | ,, |
| 13 | வெடியுப்புத் திராவகம் ... | 10 |
| 14 | களங்குச் செந்தூரம் ... | ,, |
| 15 | பூரச் சுண்ணம் ... | 11 |
| 16 | வங்கச் சுண்ணம் ... | ,, |
| 17 | நாகச் சுண்ணம் (44-வது பாட்டு) | 12 |
| 18 | லிங்கச் சுண்ணம் ... | ,, |
| 19 | தங்கச் சுண்ணம் ... | 13 |
| 20 | சாரக்கட்டு ... | ,, |
| 21 | நாகக்களங்கு ... | ,, |
| 22 | சரக்குக்கட்டு செயநீர் ... | 14 |
| 23 | வங்கச் செயநீர் ... | 18 |
| 24 | கற்சுண்ணச் சவுக்காரம் ... | 22 |
| 25 | வெடியுப்புச் சுண்ணம் ... | 27 |
| 26 | ரச பதங்கம் ... | 28 |
| 27 | துருசுச் சுண்ணம் ... | 30 |
| 28 | தாளகச் சுண்ணம் ... | ,, |
| 29 | பாஷாணச் சுண்ணம் ... | 31 |
| 30 | கல்லுப்புக் கட்டு ... | 33 |
| 31 | கல்லுப்புச் செந்தூரம் ... | 35 |
| 32 | வெடியுப்பு மோர் ... | 36 |
| 33 | நூல் தொகுப்பு ... | 39 |

உ

பரமபதி துணை.

# NEW CATALOUGE OF BOOKS.

# புதிய புத்தக கேட்லாக்

இ. ராம. குருசாமிக்கோனார் ஸன்

மதுரை புதுமண்டபம், புத்தகஷாப்,

பச்சிலை மூலிகைகளின் தமிழ்ச்

## சித்தவைத்திய அகராதி.

( இது ஓர்பெரிய வைத்திய அகராதி. )

இதில் பச்சிலை, கடைச் சரக்கு, பஞ்சபூதச் சரக்கு, உபரசச் சரக்கு, 120 பரிபாஷைப் பெயர்கள், 5 உப்புவகை இனங்களையும், உப்பாகுஞ் சரக்குகளின் விபரத்தையும், வகாரம், செந்தூரம், செய்ய சரக்குகளின் உருக்கின சத்துரு மித்துருவையும், புளியாகுஞ் சரக்குகளின் விபரத்தையும், 64 பாஷாணங்களின் பெயர்களையும், அவைகளின் சத்துரு மித்துருவையும், நிகண்டுகளின் பரிபாஷைப் பெயர்களையும் 4448 வியாதிகளின் பெயர் விபரங்களையும் கூறியுள்ளது. சித்தர் நூல்கள் ஆராய்ச்சி செய்வோர்களும், வைத்தியஞ் செய்ய ஆரம்பஞ் செய்வோர்களும் இப்புத்தகத்தை வாங்கிப் பார்க்க வேண்டியது அவசியமாகையால் ஒவ்வொருவரும் வாங்கிப் படித்துப் பார்த்து இதினுண்மையை அறிந்து மருந்துகள் செய்து பயனடையக் கோறுகிறேன் 280 பக்கங்கள் கொண்டது.

புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0

## அகத்தியர் பரிபாஷை 300.

ஓலை யேட்டுச் சுவடியிலிருந்து இப்பொழுது புதிதாய் வெளி வந்தது (அகஸ்தியர் பரிபாஷைத் திரட்டு 500) என்று ஒரு நூல் இருந்து வருகிறது இது புதிதாக இப்பொழுது அச்சிட்டது,

புத்தகம் 1-க்கு விலை அணா 0—8—0

# திருவள்ளுவர் கற்பம் 300

இதில் நாதாந்த சாரம் 100, கற்பக் குருநூல் 50, முப்பூ சூஸ்திரம் 30, வாத சூஸ்திரம் 16, முப்புக்குரு 11, வைத்தியசூஸ்திரம் 100, ஆக 7 சாஸ்திரங்கள் அடங்கியது திருவள்ளுவர் பாடிய ஞான வெட்டி 1500, க்கு சூஸ்திரமாகப் பாடியுள்ள சாஸ்திரம் இதுவேயாகும் இதில் குருமுடிக்கும் பாகங்களும், செயநீர் முடிக்கும் பாகங்களும் பூநீர் விபரங்களும், அமுர்த தாரணையின் நுட்பமும் முப்பூ விபரமும், வழலை மார்க்கமும் தெளிவாகக் கூறியுள்ள அரிய பெரிய சாஸ்திரம்.

புத்தகம் 1-க்கு விலை ரூ. 0—14—0

# யூகிமுனிவர் 1200

கும்மி 1000, பரிபூரணம் 200 இரண்டும் சேர்ந்தது.

இம்முனிவரால் பாடியுள்ள சாஸ்திரங்கள் அநேகமாயிருப்பினும் ஒவ்வொரு நூல்களும் ஒவ்வொருவர் கைவசமாய் வெளி வராமல் இருந்ததில் இந்த சாஸ்திரங்கள் மட்டும் என்னிடம் கிடைக்கப்பெற்று உலக நன்மையைக் கருதி அச்சிட்டு வெளியாக்கியுள்ளேன். இதில் வாதம், வைத்தியம், ஞானம், முப்பூ விபரங்கள் கூறியிருக்கின்றன. கலிக்கோ பயிண்டு புஸ்தகம் 1-க்கு விலை ரூ 2—0—0

# அகத்தியர் சௌமதி நூல்

இந்த சாஸ்திரம் இதுவரை வெளி வராமல் ஏட்டுப் பிரதியாக ஒரு சுவாமியாரிடமிருந்தது அவர் இதை தன்னனுபவத்தில் வைத்துக் கையாண்டு வந்ததை வாங்கி அதைப் பிரதி பண்ணி யாவரும் பார்த்துப் பயனடையுமாறு அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதில் வைத்தியம், வாதம் மாந்திரீகம் முதலான பாகங்கள் சுருக்க முறைகளாகத் தெளிவாகச் சொல்லியுள்ள அருமையான சாஸ்தரம்.

புத்தகம் 1க்கு விலை அணா 0—12—0

இதுவரை ஏட்டுப்பிரதியாயிருந்து புதிதாக அச்சிட்ட

# அகத்தியர்பரிபூரணம் 1200

இந்நூல் ஞானம், யோகம், இன்னதென்று அவரவர்களே எளிதாகத் தெரிந்து கொள்வதோடு தன்னைத்தானறிந்து ஞான யோக சாதனையடையும் மார்க்கமும், கற்பதேகி யாகவும், அநேக வைத்தியம், வாதம், சத்துரு மித்துரு விபரங்களும் சொல்லியுள்ளது.

கலிக்கோ பயிண்டு விலை ரூ 2—0—0

அகத்தியர் பன்னீரா யிரத்துக்குச் சூஸ்திரமான

# பன்னிருகாண்டம் 200.

இது அகத்தியர் பன்னீரா யிரத்துக்குச் சூஸ்திரமாகப் பன்னிரு காண்டங்களாகப் பாடியுள்ள சாஸ்திரம் 1-வது வைத்திய காண்டம், 2-வது வாத காண்டம், 3-வது சுண்ணக்காண்டம், 4-வது செந்தூரக் காண்டம், 5-வது பற்பகாண்டம், 6-வது தைலக்காண்டம், 7-வது கற்ப காண்டம், 8-வது யோக ஞான காண்டம், 9-வது தீட்சாவிதி காண்டம், 10-வது சாபநிவர்த்தி காண்டம், 11-வது ஜாலகாண்டம், 12-வது மந்திர காண்டம், ஆக பன்னிருகாண்டமா யுள்ளது.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—8—0

# கொங்கணர் நடுக்காண்டம் 500

கொங்கணர் பாடியுள்ள முக்காண்டம் 1500ரில் கடைக்காண்டம் 500 கிடைத்ததை மாத்திரம் வெகுநாளாக அச்சிட்டு விற்பனையாகி வருவது யாவருக்குந் தெரிந்தவிஷயம். பாக்கியுள்ள முதல்காண்டம் 500ம், நடுக்காண்டம் 500ம் வெகுகாலமாகக் கிடைக்காம லிருந்து இப்பொழுது ஒரு ஏட்டுப்பிரதி நடுக்காண்டம் 500 மாத்திரம் கிடைத்து. அதை அச்சிட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. அநேக கனவான்கள் பார்க்கவேணுமென்று எதிர்பார்த்திருந்த அரிய சாஸ்திரங்களில் இதுவும் ஒன்று புத்தகம். 1-க்கு விலைஅணா 0—10—0

## அகத்தியர் கற்ப முப்புக் குருநூல்

இதில் கற்ப விதிகளும், முப்பூ முடிக்கும் விபரமும், பற்பம் செந்தூர கைபாகஞ் செய்பாக முறைகளும், சுண்ணம் மெழுகு தைலம் வாலை பூசை நாற்பத்தி முக்கோணச் சக்கரத்தின் பூஜா விதிகளும், கற்ப தீட்சை முறைகளும், தெளிவாகச் சொல்லியுள்ள சாஸ்திரம்.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—8—0

## இராமதேவர் வைத்திய காவியம் 1000.

இதில் கற்பமுறைகளும், சத்துரு மித்துருச் சரக்குகளும், தைல முறைகளும், வைத்திய முறைகளும், அஷ்டகர்ம விபரங்களும், கருமான விபரங்களும், பஞ்ச பூதங்களின் விபரமும், பற்பம் செந்தூரம், சுண்ணம் செய்முறை பாகங்களும், அஷ்டாங்க யோக முறைகளும், முறையோடு விபரமாய்க் கூறியிருக்கிறது.

புஸ்தகம் 1க்கு விலை 1—0—0

டையார் சிவயோகம் 200 புத்தகம் 1-க்கு அணா 0—6—0

### விஷவைத்தியமென்னும்

## "ஒன்பதுவிஷ ஆரூடம்"

இதில் ஒன்பதுவிஷ ஆரூடசாஸ்திரங்களைச் சேர்த்து ஒரே புத்தகமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பாம்பு. தேள், நட்டுவக்காலி, பூரான், செய்யான், வண்டு, அரணை, எலி, நாய்,குரங்கு, பூனை, முதலானவைகள் கடித்து விஷமேற்பட்டால் பச்சிலை மூலிகைகளினாலும், கடைச்சரக்குகளாலும், விஷத்தை நீக்குவதற்குஇலகுவான முறைகளாய்ச் சமயோசிதம்போல் செய்வதற்கான விதமாய்க் கூறியிருப்பதோடு மந்திர யந்திர பூஜாவிதிகளும், விபரமாய்ச் சொல்லியிருக்கிறது எமது மூதாதைகள் கையாண்டு அநுபவித்துவந்த உண்மையான சாஸ்திரம். சுத்தப்பதிப்பு 392-பக்கங்கள் கொண்ட கலிக்கோ பயிண்டு

பெரிய புஸ்தகம் 1-க்கு விலை ரூபாய் 2—0—0

# புலஸ்தியர் கற்பம் 300.

இதில் கற்பசாதனைகளின் விபரங்களையும், யோகஞான மார்க்கத்தையும், அகார உகார விபரங்களையும், வாசி யோகஞ் செய்யும் முறைகளையும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல், தெளிவாகக் கூறியுள்ளது ஓலை யேட்டுப் பிரிதியிலிருந்து புதிதாய் அச்சிட்டது.

புத்தகம் 1 க்கு விலை அணு 0—8—0

# புலஸ்தியர் வாத சூஸ்திரம் 300.

இந்தச் சாஸ்திரத்தில் ரசவாதத்துக்குறிய செம்பு வேதை, செம்புச் செந்தூரவேதை, துருசுச்செம்பு எடுக்கும் விதம், கெந்தக தைலம் நாகரச கெந்தி தைலத்தின் பெருமையும் அதினால் மாற்று உயரும் முறையும் தங்க உரம், வெள்ளி உரம் செய்யும் முறைகளும் சரக்கு கட்டுவகைகளும், செந்தூரப், பஸ்பம், சுண்ணம், இவைகளை அநு போக முறைகளாய்ச் செய்து கொடுத்து குணமாகும் வியாதிகளை ரெம்பவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை ரூ 0—8—0

# தன்வந்திரி வைத்தியக் குருநூல் 200.

இதில் தன்வந்திரி பகவான் பாடிய சாஸ்திரத்திற்கெல்லாம் திறவுகோல் போல் ஷையாரால் சொல்லிய சாஸ்திரத்தில் பற்பம், செந்தூரம், மாத்திரை, தைலம், சூரணம், சரக்குக்கட்டு வகைகளை எளிதாகச் செய்து கொள்ளக்கூடிய முறைகளாகத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது புஸ்தகம் 1-க்கு விலை அணு 0—8—0

# கருவூரார் வாதகாவியம் நொண்டி 700.

இதில் கற்பம், வயித்தியம், வாதம், ஞானம், யோகமுதலிய பாகங்களை நொண்டிச் சிந்தாகவும், ஆனந்தக் களிப்பாகவும், அம்மானைப் பாவாகவும், சிந்தாகவும் பலமாதிரி சந்தங்களாய் இக்கலியுக தருமம் எவ்விதம் நடைபெறு மென்பதை விபரமாயும் விநோதமாயும் சூட்சமமாயும் சொல்லி யிருக்கிறது.

புஸ்தகம் 1 க்கு விலை ரூபாய் 0—14—0

# போகர் கற்பம் 300.

இதில் அமுரி கற்பம் சாப்பிடும் விதமும், அதை எக்தவிதத்தில் மூரித்துச் சாப்பிடுகிறது என்பதும், அதை எப்படி உபயோகிப்பதென்பதும் கற்பம் சாப்பிடுங் காலத்தில் ஏற்படக்கூடிய சூடு சோபதாபங்களுக்கு வேண்டிய சிஷாயங்களும் அதுசமயம் ஸ்நானம் செய்யும் முறையும், கற்பம் சாப்பிடும் போது புளி உப்பு பெண்போகம் கூடாதென்பதின் காரணமும், அக்குற்றங்களேற்பட்டால் அதற்கான சிகிச்சை செய்துகொள்ள வேண்டிய வகையும், கற்ப மூலிகை விபரங்களும், கருந்துளசி கருநெல்லி கருநொச்சி இவைகளை நாமே பயிர் பண்ணிக் கொள்ளவேண்டிய முறையும், வாத முறைகளுக்குத் தைல வகைகளும், சுத்தி முறைகளும், சிதம்பரத்தில் தங்க விக்கிரகஞ் செய்த விபரமும், சொல்லியுள்ள புதிய சாஸ்திரம்.

புத்தகம் 1 க்கு விலை அணா 0—10—0

# அகத்தியர் ஐந்து சாஸ்திரங்கள்.

**மணக் கோலம் 200, கனக மணி 100, வைத்தியக் கோவை 125, வைத்தியத் திரட்டு 81, கிருக்கு நூல் என்னும் கிரிகை 18 க்கும், குணமும்' நிவர்த்தி செய்யும் மருந்து பாகங்களும், அடங்கியது. ஆ 5 சாஸ்திரங்கள்.)**

இதில் வயித்திய பாகங்கள் பாஷாணங்களில்லாது கடைச் சரக்குகளைக்கொண்டு எளிய முறையாகச் செய்து கொடுத்து சகல நோய்களையும், தீர்க்கு வண்ணம், கைபாகஞ் செய்பாகம், முறையோடு சொல்லி யிருப்பதோடு, மானிடர்க்கு, வாத பித்த சிலேற்பனத்தால் ஏற்படும், 18 விதமான கிறுக்குகளின் குணமும், அதை நிவர்த்திக்க மூலிகை களினுல் மருந்தும், கலிக்க வகைகளும், நசிய வகை களும், துவாலை வகைகளும், தெளிவாய்க் கூறியுள்ள அரிய பெரிய சாஸ்திரம் இப்புத்தகம் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய தவசியம் அவரவர்களே மருந்துகள் செய்து கொடுத்து வியாதியை குணப்படுத்திக் கொள்ளும் முறைகளாய் அடக்கியுள்ள சாஸ்திரம்.

புத்தகம் 1-க்கு விலை அணா 0—12—0

# காக புசுண்டர் 1000.

சித்தர்களில் ஒருவராகிய புசுண்ட மகாரிஷி என்பவர் பிரளய காலத்தில் கல்லாலின்மேல் இருந்து ஒவ்வொரு பிரளய காலமும் பார்த்துவந்தவர். இவர் அநேகசாஸ்திரம் பாடியிருக்கிறார். ஆனால் இது வரை சில சாஸ்திரங்கள் மட்டும் அச்சுக்கு வந்திருக்கிறது. ஷெ யாரால் பாடியதில் முக்கியமான இப்புசுண்டர் பெருநூல் காவியம் 1000. இது வரை ஏட்டுப்பிரதியாயிருந்து இப்பொழுது புதிதாக அச்சிட்டிருக்கிறது. இதில் யோகம். ஞானம் அமுததாரணை வாசி விபரமும் கற்பம் என்பது தன்னுள்ளே முடிந்திருக்கிறது என்ற விபரம் முதலிய இன்னும் அநேக மர்மங்களும் அடங்கியுள்ள சாஸ்திரம். 250-பக்கங் கொண்ட கலிக்கோ பயிண்டு. புஸ்தகம் விலை ரூ 2—0—0

## அகத்தியர் தற்க சாஸ்திரம்.

இது அகத்திய முனிவரால் புலத்தியருக்கு உபதேசஞ் செய்தது. இதில் பதினெண் சித்தர்களாலும் பாடிய வைத்திய வாத யோகஞான நூல்களின் பரிபாஷைப் பெயர்களையும், அநேக மர்மமான பதங்களுக்குத் தாத்பரியங்களையும் வினு விடையாகக் கூறியிருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை அணு 0—10—0

17-சாஸ்திரம் அடங்கிய இராமதேவரென்ற

# யாகோபு வைத்திய கோர்வை

இராமதேவராக இருந்து பின்பு மக்காவுக்கு சென்று நபிமார்களுடன் பேசியதில் அவர்கள் இவர் திறமையையும் சாஸ்திர ஆராய்ச்சியும் தெரிந்து யாகோபு என்று பெயர் கொடுத்தார்கள் பின்பு யூனானிமுறைகளையும், தமிழ் முறைகளையும் கவனித்து அநேக வைத்தியங்களும், வாதம், யோக முறைகளும், ஞானமும், நாடி விபரமும், சரக்குச்சுத்திகளையும், 17-சாஸ்திரங்களாகப் பாடியிருக்கிறார். இந்த சாஸ்திரத்தை அநேகர் வாங்கி ரெம்ப அனுபவ முறையாகக் கையாண்டு வருகிறார்கள் 17-சாஸ்திரமும் சேர்ந்த கலிக்கோபயிண்டு விலை ரூ 9—0—0

இந்தப் 17 சாஸ்திரங்களையும் 12 புஸ்தகங்களாகப் பயிண்டு செய்திருப்பதால் தனித்தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

## நந்தீஸ்வரர் நிகண்டு 300.

இதில் உப்பு இன்னதென்றும், வீரம், பூரம், வெள்ளைப் பாஷாணம் என்று சொன்ன சரக்குகளின்விதென்றும் அதினால் வசாரம் முடியுமென்றும், மூலிகை யென்ற சரக்குகளின் விபரமும், ஓம் என்றதின் பொருள் இன்னதென்றும் இன்னும் அநேக பரிபாஷைக ளெல்லாம் விபரமாகச் சொல்லி யிருக்கிறது.

புத்தகம் 1 க்கு விலை அணா 0—8—0

## உரோமரிஷி பரிபாஷை 300.

இதில் பரிபாஷைப் பெயர்களை விளக்கிக் கூறியிருக்கிறது, இவர் பாடிய நூல்கள் அனேக மிருப்பினும், வைத்தியம் 500 என்றநூல் மட்டுந்தான் அச்சிட்டு வெளிவந்திருக்கிறது இன்னும், கூடியசீக்கிரத்தில், இவரால் பாடிய சாஸ்திரங்கள் அச்சிட்டு வெளிவரும், இப்பொழுது இந்த பரிபாஷை 300 அச்சிட்டு தயாரிலிருக்கிறது.

புத்தகம் 1 க்கு விலை அணா 0—8—0

## அகஸ்தியர் பூஜா விதி 200.

## ஞான சைதன்யம் 51ம் சேர்ந்தது.

இதில் சிதம்பரச் சக்கரமும் சிதம்பர பூசையும் அஷ்டகன்ம பூஜா வி ரங்களும் தேவி பூஜா மார்க்கமும் மவுன யோக ஞான சாதன விபரங்களும் தெளிவாய்க் கூறியுள்ளது. விலை ரூ 0—8—0

அருணகிரிநாத சுவாமிகளால் இயற்றிய

## பெரிய கந்தரனுபூதி

யந்திர மந்திர சக்கர பூஜாவிதிகளுடன் கூடியது.

புஸ்தகம் 1-க்கு விலை அணா 0—3—0